லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-8 இதழ்-5 அக்டோபர் - 2019 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai



# தீர்வு கிடைக்குமா?

## நதிநீர் பிரச்சனை?





# வள்ளலார் அருளிய

# கல்ப மருந்து

பத்தியமில்லா மருந்து

## குணமாகும் நோய்கள்







- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில்

ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்



- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்



- சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
- கபம் ■ காசம் ■ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ■ பித்தம்

போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்

நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்



சித்த மருத்துவர் **K. இராஜமாணிக்கம்**

**அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்**

எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.

எண்.29, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

**செல் : 99417 64922, 94441 80984**

# தலையங்கம்

"அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்"

## சபாஷ் தொல்லியல் துறை

கீழடியில் ஐந்து கட்டங்களாக நடத்தப்பட்ட அகழாய்வுகளில், நான்காம் கட்ட ஆய்வின் முடிவுகள் தமிழக அரசின் தொல்லியல் துறையால் வெளியிடப்பட்டுள்ளன. அரசு தந்திருக்கும் அறிக்கையின்படி பார்த்தால், அகழாய்வில் கிடைத்த கரிம மாதிரிகளைக் கொண்டு கீழடி 2600 ஆண்டுகளுக்கு முற்பட்ட நகர்ப்புற வாழ்விடப் பகுதியாக விளங்கியிருக்கிறது என்று கருத இடம் தருகிறது. கீழடியில் கிடைத்திருக்கும் மண்பாண்டங்களில் உள்ள குறியீடுகள், அந்தக் காலகட்டத்திலேயே அங்கு வாழ்ந்த மனிதர்கள் எழுத்தறிவு பெற்றிருந்ததற்கான ஆதாரங்களாக இருக்கின்றன. கருத்துச் செறிவு மிக்க சங்க இலக்கியங்களுக்கு முன்பே தமிழர்களிடம் நகர்ப்புற நாகரிகம் இருந்திருக்க வேண்டும் என்ற அனுமானத்தை மெய்ப்பிப்பதுபோல இருக்கின்றன கீழடியின் அகழாய்வு முடிவுகள். அந்த வகையில், இந்திய தொல்லியல் வரலாற்றில் கீழடி ஒரு முக்கியமான திருப்புமுனை என்று சொல்லலாம்.

தொடர்ந்தும் இங்கு ஆய்வுகளை நடத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை மத்திய தொல்லியல் துறை உணர வேண்டும். வெளிவரப்போகும் ஆய்வு முடிவுகள், காலக் கணிப்பை மேலும் வலுப்படுத்தும். ஒருவேளை, மாறுபாடுகள் இருந்தால், வெவ்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்துவந்த மாற்றங்கள், இடப்பெயர்வு குறித்து மேலும் தொடர்ந்து ஆய்வுகளை நடத்த வேண்டியிருக்கும்.

கீழடி அகழாய்வை தமிழக அரசு மேற்கொண்ட நாள் முதலே அதுகுறித்து தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் க.பாண்டியராஜனும், தொல்லியல் துறை ஆணையர் த.உதயசந்திரனும் காட்டிவரும் அக்கறையும் ஈடுபாடும் குறிப்பிடப்பட வேண்டியவை. "முதலில் நடந்த மூன்று கட்ட அகழாய்வுகளின் முடிவுகளும் விரைவில் வெளிவரும் என்று அறிவித்திருக்கிறார் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சரான க.பாண்டியராஜன். சமீபத்தில் டெல்லி சென்றிருந்த அவர், மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சரையும், கலாச்சாரத் துறை அமைச்சரையும் சந்தித்து கீழடியில் உலகத் தரத்தில் ஓர் அருங்காட்சியகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்துள்ளார்.

தற்போது அகழாய்வுகள் நடந்து முடிந்திருப்பதும்கூட மிகச் சில சதுர கிமீ பரப்பளவில் மட்டுமே. ஹரப்பாவும் மொஹஞ்சதாரோவும் பாகிஸ்தானிடம் சென்றுவிட்ட நிலையில், இந்தியாவில் உள்ள மிகவும் பழமையான தொல்லியல் பகுதியாக கீழடியை அறிவிக்க வேண்டும் என்றும் மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளார் பாண்டியராஜன். இந்தக் கோரிக்கைகள் முக்கியமானவை; இவற்றுக்கு மத்திய அரசு செவிமடுக்க வேண்டும்.

தமிழக தொல்லியல் துறை கடந்த ஐம்பது ஆண்டுகளில் நாற்பது அகழாய்வுகளை நடத்தியிருந்தாலும் கீழடி அகழாய்வுக்குப் பிறகுதான் தமிழகத்தில் அனைவரும் வரலாற்று ஆய்வுகளின் மீது கவனம் குவித்திருக்கிறார்கள். கீழடி ஆய்வுகள் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே இதுகுறித்து வெளிவந்த செய்திகளும், ஆய்வில் கடைப்பிடிக்கப்பட்ட வெளிப்படைத்தன்மையுமே அதற்கான காரணம். தமிழக மக்களின் கீழடி தொடர்பிலான கதையாடல்களும், அங்கு சென்று பார்த்துவருவதுமான வரலாற்றார்வமும் வளர்த்தெடுக்கப்பட வேண்டியவை. அதேசமயத்தில், கீழடியின் பெருமை தமிழர்களின் பெருமை மட்டுமல்ல; இந்தியாவின் வரலாற்றுப் பெருமையும்கூட என்பதையும் நாம் உணர வேண்டும். இப்படியான அகழாய்வு முடிவுகள் நாம் கடந்துவந்திருக்கும் பாதையானது எவ்வளவு பன்மைத்துவத்தை உள்ளடக்கியது என்பதைத்தான் உணர்த்துகிறதே அன்றி, நம்மிடையே நிலவிவரும் இன, மொழி வெறி துவேஷங்களுக்கு வலுவூட்டும் எண்ணங்களை அல்ல என்ற புரிதல் நமக்கு வேண்டும். வரலாற்றை வரலாறாக அணுகுவோம், எல்லோருமே!

**- ஆசிரியர்**



# சொந்த ஊர் பக்கமே முதல்வரின் பார்வை இப்படி இருக்கிறது!

மேட்டூர் அணையிலிருந்து கடந்த பத்து நாட்களாக வழக்கத்தைக் காட்டிலும் கூடுதலாகத் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நாளொன்றுக்கான பாசன நீர்த் தேவை 2.2 டிஎம்சி. ஆனால், கடந்த பத்து நாட்களில் 19 டிஎம்சி நீர் கூடுதலாகவே திறந்துவிடப்பட்டுள்ளது. உபரி நீர் பெருக்கெடுத்து ஓடினாலும் அது கொள்ளிடம் வழியே ஓடி கடலில்தான் கலக்கிறதேயொழிய காவிரியின் கடைமடைப் பகுதிகளுக்கு இன்னும் சென்றுசேரவில்லை. மழை பொய்த்தும் ஆற்றில் நீர்வரத்து குறைந்தும் விவசாயம் பொய்ப்பது காவிரிப் படுகை விவசாயிகளுக்கு பழகிப்போன அனுபவம்தான். ஆனால், இந்த முறை ஆற்றில் நீர் கரைபுரண்டும், விவசாயத்துக்குப் பயன்படுத்த முடியாத நிலை. என்ன காரணம்?

ஜனவரி 28-ல் மேட்டூர் அணையை மூடி, ஜூன் 12-ல் மீண்டும் திறப்பதற்கு இடைப்பட்ட காலத்தில்தான் காவிரிப் படுகையில் வாய்க்கால் களையும் நீர்நிலைகளையும் தூர்வாருவது வழக்கம். இந்த முறை, ஜூலை மாதத்தில்தான் குடிமராமத்துப் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டது. கடந்த ஆண்டு கால்வாசிப் பணிகள் நடந்தன என்றால், இந்த ஆண்டு பாதி வேலைகள் நடந்திருக் கின்றன. பரவாயில்லைதான், ஆனால், அதனால் ஒரு பயனும் இல்லை என்பதுதான் உண்மைநிலை.

கடந்த ஆண்டு குடிமராமத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒப்பந்ததாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் காரணமாக ஆளுங்கட்சியின் மீது விவசாயிகளிடம் கடும் அதிருப்தி எழுந்தது. அதிருப்தியைக் குறைக்கும் முயற்சியாக இந்த ஆண்டு ஒப்பந்ததாரர்களுக்குப் பதிலாக விவசாயிகளிடமே பணிகளை ஒப்படைப்பதாக அறிவித்தது அரசு.

அதற்காக தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் பாசனதாரர்கள் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. பாசனதாரர்கள் 10 சதவீதம் செலவை ஏற்றுக்கொள்ள அரசு 90 சதவீதம் செலவை ஏற்கும் என்று கூறப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு பாசனதாரர்கள் சங்கங்கள் என்ற பெயரில்குடிமராமத்துப்பணிகளைஏற்றிருப்பதும் வழக்கம்போல ஆளுங்கட்சிக்காரர்கள்தான்.

மணல் கொள்ளையைத் தடுத்து நிறுத்த விரும்பாத அரசு, மண் கொள்ளையைக் கட்டுப் படுத்துவதில்தீவிரம்காட்டியது. அதன்விளைவாக, கிராமங்களில் வீடு கட்டுபவர்கள் மனையை உயர்த்துவதற்காகச் சொந்த நிலத்திலிருந்து மண் வெட்டுவதற்கும்கூட வருவாய்த் துறையிடமிருந்து அனுமதி பெற வேண்டியது கட்டாயமானது. இந்நிலையில், பாசனதாரர் சங்கங்கள் குளம், குட்டைகளைத் தூர்வாரும் பணியைச் செய்யலாம் என்று அறிவித்தது மீண்டும் ஒரு மண் கொள்ளைக்கே இட்டுச்செல்கிறது.

நீர்நிலைகளை ஆழப்படுத்தும்போது கிடைக்கிற மண்ணைக் கொண்டு கரையை உயர்த்தாமல் அதை விற்பனை செய்வதே வேலையாக நடக்கிறது. நீர்நிலைகளிலிருந்து

வெட்டப்படும் மண் ஒரு லாரிக்கு இவ்வளவு என்று விலைவைத்து விற்கப்படுகிறது. குடிமராமத்துப் பணிகள் நடக்கும் இடங்களில் வருவாய்த் துறையோ பொதுப் பணித் துறையோ இவற்றைக் கண்காணிக்கவோ கட்டுப்படுத்தவோ இல்லை.

குளம், குட்டைகளைத் தூர்வாரும் பணிகள் காலம் தாழ்ந்து நடந்துகொண்டிருக்கின்றன என்றால், அந்தக் குளங்களுக்கு நீரைக் கொண்டுவந்து சேர்க்கும் வாய்க்கால்களைத் தூர்வாரும் பணிகள் தொடங்கப்படவே இல்லை. ஆற்றிலிருந்து கிளை பிரியும் வாய்க்கால்கள்தான் காவிரிப் படுகையின் நரம்பு மண்டலமாக இயங்கிவருகின்றன. கல்லணையிலிருந்து கிளை பிரியும் காவிரி, வெண்ணாறு, கல்லணை வாய்க்கால் ஒவ்வொன்றும் சிறு சிறு வாய்க்கால்களாகப் பிரிந்து காவிரிப் படுகையைச் சூழ்ந்துள்ளன. இந்த நீர்வழித் தடங்கள் முறையாகத் தூர்வாரப்படவில்லை.

உபரி நீரைப் பாசன வாய்க்கால்களில் திருப்பி விடாததற்கு முக்கியக் காரணம், இந்த வாய்க்கால்கள் அனைத்தும் நீர் செல்லும் நிலையில் இல்லை என்பதே. காவிரிப் படுகையின் எந்தச் சாலையில் சென்றாலும் பாலம் அமைக்கும் வேலைகளைத்தான் பார்க்க முடிகிறது. கடந்த ஆண்டுகளில் தரைப்பாலம் கட்டுகிறோம் என்று வாய்க்கால்களைத் தடுத்தார்கள். இந்த ஆண்டு தரைப்பாலங்களுக்குப் பதிலாக மேம்பாலங்களைக் கட்டுகிறோம் என்று நீர்ப்பாதையைத் தடுத்துவைத்திருக்கிறார்கள்.

திருத்துறைப்பூண்டியிலிருந்து வேதாரண்யம், வேதாரண்யத்திலிருந்து நாகை செல்லும் சாலைகளில் நிறைய பாலங்கள் நீண்ட காலமாக பாதி வேலை முடிந்த நிலையிலேயே கிடக்கின்றன. விவசாய நிலங்களுக்குப் பயன்படும் பாசன வாய்க்கால்களின் மீது கோடை காலத்திலேயே பாலங்களைக் கட்டி முடிக்க வேண்டும் என்ற அக்கறை அரசுக்குத் துளியும் இல்லை என்பதையே இது காட்டுகிறது.

காவிரியின் கடைமடையிலிருந்து இப்படி கூக்குரல்கள் கேட்டுக்கொண்டிருக்க மேட்டூர் அணைக்கட்டைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து எழுகின்ற குரல்கள் வேறுவிதம். முதல்வர் எடப்பாடி கிழக்குக் கால்வாய் பகுதியில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட ஏரிகளைத் தூர்வாரி, குழாய்கள் மூலமாக நீரைக் கொண்டுசென்று அந்த ஏரிகளை நிரப்பும் பணிகளைத் தொடங்கியிருக்கிறார். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏரிகளைப் புனரமைக்கும் முதல்வர், காவிரிக்கு மேற்கே ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த அந்தியூர் பகுதிகளை முற்றிலும் கைவிட்டுவிட்டார் என்கிறார்கள் அங்கிருக்கும் விவசாயிகள்.

அந்தியூர் வட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் மேற்குக் கால்வாயைக் காட்டிலும்




ஏரிகளைத்தான் பெரிதும் நம்பியிருக்கிறார்கள். காவிரியிலிருந்து 8 கிமீ தொலைவில் 42 ஏக்கர் பரப்பளவில் விரிந்திருக்கும் செல்லாயூர் பெரிய ஏரி தூர்வாரப்படாமல்தான் கிடக்கிறது. 25 ஏக்கர் பரப்பளவு கொண்ட கரடுப்பட்டியூர் ஏரியும் கைவிடப்பட்ட நிலையில்தான் இருக்கிறது.

அதுபோலவே பழையூர் ஏரி, புதூர் ஏரி, ஆணைக் கவுண்டனூர் ஏரி, முளியனூர் ஏரி என்று விவசாயத்துக்கு ஆதாரங்களாக இருக்கும் பெரும்பாலான ஏரிகளை தமிழக முதல்வர் கண்டுகொள்ளவே இல்லை. ஆற்றுக்குக் கிழக்கில் மட்டும்தான் அவரது பார்வை இருக்கிறது, மேற்குப் பக்கமாக அவர் திரும்பவே இல்லை என்கிறார்கள் அந்தியூர் வட்டார விவசாயிகள்.

சொந்த ஊர் பக்கமே முதல்வரின் பார்வை இப்படி இருக்கிறது என்றால், மாநிலம் முழுவதும் உள்ள நீர்நிலைகளைப் பற்றி விவரிக்கவா வேண்டும்? அடிப்படையிலேயே நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலம் இது. நல்ல மழை பொழிவது மக்களுக்கு மட்டும் அல்ல, அரசுக்கும் சேர்த்தே வெகுமதி. அந்த மழையைக் கூடப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலையில் நாடு இருந்தால் அதைக் காட்டிலும் கொடுமை இல்லை!

**- K. ரமேஷ்குமார்**

# அதிகரித்து வருகிறதா சட்ட ஒழுங்கு பிரச்சனை?



இந்தியாவில் கிரிமினல் குற்றங்களின் எண்ணிக்கை கடந்த 10 ஆண்டுகளில் கடுமையாக அதிகரித்திருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. காவல் துறை போதுமான அளவு எண்ணிக்கை பலமும், தொழில்நுட்ப பலமும் கொண்டிருக்கிறதா என்கிற கேள்வி அனைத்துத் தரப்பிலும் எழுப்பப்படுகிறது. தொழில்நுட்ப ரீதியாகப் பார்த்தால், மேலை நாடுகளிலும் வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் காவல் துறையினர் அடைந்திருக்கும் மேம்பாடும், அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் வசதிகளும் இந்தியாவில் தரப்படவில்லை என்கிற அவலத்தை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அமைச்சரவை காவல்துறையை நவீனப் படுத்துவதற்காக ரூ.25,000 கோடி ஒதுக்கீடு செய்திருந்தது. அந்த ஒதுக்கீட்டின் பெரும் பகுதி ஜம்மு - காஷ்மீர் மாநிலத்திலும், வடகிழக்கு மாநிலங்களிலும், நக்ஸல் தீவிரவாதிகளின் பாதிப்பை எதிர்கொள்ளும் மாநிலங்களின் காவல்துறையை நவீனப்படுத்துவதற்காகவும் செலவிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதனால், மாநில அரசுகளுக்கு காவல் துறை நவீனமய மாக்கலுக்காக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு மிகமிகக் குறைவு.

காவல் துறை ஆய்வு மற்றும் வளர்ச்சி அமைப்பு சில புள்ளிவிவரங்களை அண்மையில் வெளியிட்டிருக்கிறது. அந்தப் புள்ளிவிவரத்தின்படி, 5 லட்சத்துக்கும் அதிகமான காவல் துறை பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்கிற அதிர்ச்சி அளிக்கும் தகவல் வெளியாகியிருக்கிறது. காவல்துறை பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கும் மாநிலங்களில் உத்தரப் பிரதேசம் முதலிடம் வகிக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் தொடங்கி பிகார், மேற்கு வங்கம், தெலங்கானா, மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலும் காவல் துறை பணியிடங்கள் நிரப்பப் படாமல் காணப்படுவதாக அந்த ஆய்வு தெரிவிக்கிறது.காவல் துறை பணியிடங்கள் நிரப்பப் படாமல் இருப்பது குறித்து 2006-இல் உச்சநீதிமன்றம் கவலை தெரிவித்தது. காவல் துறை சீர்திருத்தத்தை மாநில அரசுகள் மேற்கொள்ளாமல் இருப்பது குறித்தும், காவல்துறை பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பது குறித்தும் கவலைப் பட்ட உச்சநீதிமன்றம், மாநில அரசுகளுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுத்தது. ஆனாலும்கூட, எதிர்பார்த்த அளவிலான சீர்திருத்தம் எதுவும் காவல் துறையில் ஏற்படவில்லை.

கடந்த 2005-க்கும் 2015-க்கும் இடையிலான 10 ஆண்டுகளில் குற்றங்களின் எண்ணிக்கை இந்தியாவில் 28% அதிகரித்திருக்கிறது. இப்போது அதன் சதவீதம் மேலும் அதிகரித்திருக்கக் கூடும். அதற்கு முக்கியமான காரணம், போதுமான அளவில் காவலர்கள் இல்லாமல் இருப்பது என்பதைத்தான் அண்மைக்கால ஆய்வு வெளிப்படுத்துகிறது.ஒரு லட்சம் பேருக்கு 180 காவலர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 135 பேர்தான் இருக்கிறார்கள். மீதிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. ஐ.நா. சபையின் பரிந்துரைப்படி ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 222 காவலர்கள் இருக்க வேண்டும்.போதிய அளவிலான காவல் துறையினர் இல்லாமல் இருப்பதால் காவல் துறையினரின் பணிச்சுமை கடுமையாக அதிகரித்திருக்கிறது. அரசியல் ரீதியிலான போராட்டங்களும், அரசியல் தலைவர்களுக்குத் தரப்படும் பாதுகாப்பும் குறைந்த அளவில் இருக்கும் காவலர்களின் சேவையை அபகரித்துக் கொண்டுவிடுவதால், தங்களுக்குத் தரப்பட்டிருக்கும் அடிப்படைக் கடமையான சட்டம் - ஒழுங்கைப் பாதுகாப்பதிலும், பொதுமக்களைப் பாதுகாப்பதிலும் காவலர்கள் தவறுகிறார்கள்.

ஹரியாணா மாநிலத்தில் 2016-இல் இட ஒதுக்கீடு கோரி ஜாட் இன மக்கள் போராட்டம் நடத்தியபோது ஏற்பட்ட வன்முறையை காவல் துறையினர் வேடிக்கை பார்த்தனர். அந்த வன்முறைக் கும்பலைக் கட்டுப்படுத்த தாங்கள் தடியடிப் பிரயோகமோ, துப்பாக்கிச் சூடோ நடத்தியிருந்தால், அதைத் தொடர்ந்து

நடத்தப்படும் விசாரணையில் தண்டிக்கப் படுவோம் என்கிற அச்ச உணர்வால் போராட்டத்தை வேடிக்கை பார்த்தோம் என்று இப்போது பதவி ஓய்வு பெற்றிருக்கும் ஹரியாணா மாநில உயரதிகாரி ஒருவர் தன்னிலை விளக்கம் அளித்திருக்கிறார். இதே மனநிலை இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் காணப்படுகிறது என்பதுதான் உண்மை நிலை.

சட்டம் - ஒழுங்கு தகர்வது, காவல் துறையினர் முறையாகக் கண்காணிப்புப் பணியில் ஈடுபடாமல் இருப்பது, குற்றங்களைத் தடுப்பதிலும், கண்டு பிடிப்பதிலும் கவனக்குறைவும் மெத்தனப்போக்கும் அவர்கள் மத்தியில் காணப்படுவது, இவற்றுக் கெல்லாம் அவர்களது எண்ணிக்கை பலம் குறைந்திருப்பது மட்டுமே காரணம் என்று கூறிவிட முடியாது. போதுமான அளவு பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படாமல் இருப்பதும், காவல் துறை யினருக்கான ஒதுக்கீடுகள் முறையாகச் செய்யப் படாமல் இருப்பதும் சில காரணிகள். காவல் துறை பணியிடங்களை நிரப்புவதில் காணப்படும் ஊழலும் ஒரு காரணம். இவையெல்லாம் இருந்தாலும்கூட, காவலர்களின் எண்ணிக்கைக் குறைவு மிக முக்கியமான காரணம். காவல் துறை



அதிகாரிகள் மத்தியிலும் எண்ணிக்கைக் குறைவு காணப்படுகிறது. போதுமான நிதி ஒதுக்கீடு, காலியான பணியிடங்கள் முழுமையாக நிரப்பப்படுவது, பணியிடங்கள் நிரப்பப்படுவதில் ஆட்சியாளர்களின் தலையீடு இல்லாமல் இருப்பது - இவையெல்லாம் பின்பற்றப்பட்டால் திறமையான காவல் துறை உருவாக முடியும். இப்படிப்பட்ட சூழலில் நிதி ஒதுக்கீடு அளிக்கப்படாமல் போனால் கூட, உடனடியாகக் காலியாக இருக்கும் காவலர்கள் பணியிடங்களையாவது நிரப்புவதற்கு மாநில அரசுகள் முன்னுரிமை அளிக்க வேண்டும். குற்றங்கள் அதிகரித்து வருவதும், சட்டம் - ஒழுங்குப் பிரச்னைகள் காவல் துறையினரால் முறையாக எதிர்கொள்ளப்படாமல் இருப்பதும் விபரீதங் களுக்கு வழிகோலும் என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

**- முனைவர் M. சத்தியராஜ்**


வாழ்க தமிழ்!

வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை®

மக்களின் மனக்குமுறல் — மாத இதழ்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-8 இதழ்-5 அக்டோபர் - 2019

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
**V. அருணாச்சலம், A.C. குமார், S. அனந்த கிருஷ்ணன்**, M.A.,

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்
**வீ.சிவசங்கரன்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
V.சங்கர், அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
S.ராம்குமார் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
A.பாலகிருஷ்ணன் கோவை, நாகராஜ் மூணாறு
R.ஜெயா தென்சென்னை, K.அழகர்சாமி வட சென்னை
S.ரமேஷ் காஞ்சி, மாரிமுத்து உளுந்தூர்பேட்டை
சுசி ஈஸ்வர் விருதுநகர், N.சிலம்பரசு தர்மபுரி
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி, குருபாலகிருஷ்ணன்

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம்
K.L.ராஜேந்திரன், P.ஏழுமலை, M.நிவேதிதா
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்
B.நாராயணசாமி, நீலகண்டன், S.மோகன்
N.சீனிவாசன், G.ராஜேஷ்கண்ணா, R.பார்த்தசாரதி
G.ஆனந்த்குமார்,

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M.அருணாச்சலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**

நிர்வாக அலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

# சாகாக் கலை
## எனப்படும்
# காயகல்பம்

### வள்ளலார் அருளிய கல்ப மருந்து

Dr. K. ராஜமாணிக்கம்



சித்தர்நூல்களில் பெரும் புதிராக விளங்கும் இம்மூன்றும் மறைமொழிச் சொற்களாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன.

என்றாலும், இவை சூதம், கெந்தகம், காந்தம் என்னும் மருந்துப் பொருள்களையும் அடி நடு முடி என்னும் மூலாதாரம், சுழுமுனை, உச்சி ஆகிய யோக நிலைகளையும் அகரம் உகரம் மகரம் என்னும் மந்திரங்களையும் உரைப்பவை என அறியப்படுகிறது.

**ஐம்பத்தோர் எழுத்து:**

சித்தர் இலக்கியங்கள், ஐம்பத்தோர் எழுத்துகளைப் பற்றிக் குறிப்பிடக் காணலாம். திரு அருட்பா அனுபவ மாலை18, திருமந்திரம்11 இடங்களில் இக்குறிப்பு காணப்படுகிறது. சித்தர்களின் குழூஉக்குறி குறிகளில் இதுவும் ஒன்று.

**அம்பத் தொன்றில் அக்கரம் அடக்கம்**
**இந்த ஐம்பத்தோர் எழுத்தில் அகரமும்**
**அடக்கம் எனச் சிவவாக்கியரும்,**
**அம்பத்தோர் அட்சரம் அறியநீ சொல்லடி**
**சிங்கிஅது**
**வஞ்ச மகர நடுச்சுழி மூன்றுமே சிங்கா**
**இந்த எழுத்துகள் அகரம் உகரம் மகரம்**
**என்னும் அடி நடு முடி என்னும் மூன்றுமே**
**என்று ஞான ரத்ன குறவஞ்சியும்,**
**அஞ்செழுத்தாய் எட்டெழுத்தாய்**
**ஐம்பத்தோர் அச்சரமாய்ப்**
**பிஞ்செழுத்தாய் நின்ற பெருமானைப்**
**போற்றாமல்**

நமசிவாய என ஐந்தெழுத்தாய், நமசிவய+அஉம என எட்டெழுத்தாய், ஐம்பத்தோர் எண்களாய் இருப்பது இந்த உடலில் உள்ள உயிர். அதனைப் போற்றி வேண்டுங்கள் என்று பட்டினத்தாரும் கூறக் காணலாம்.

ஐம்பத்தோர் எழுத்து என்பது எழுத்தா, எண்ணா என்பது சித்தர் இலக்கியத்தை ஊன்றிப் படித்தால்தான் விளங்கும். யோக முறையைப் பயிலும் போது மூச்சுக் காற்றைப் பயிற்றுவிக்க வேண்டும். இதனைப் பிரணாயாமம் எனக் கூறுவர். பத்து வகை வாயுக்களில் பிராணன் என்னும் மூச்சுக் காற்று வெளியே போகாதவாறு கட்டுவதே (சாகாக்கால்) பிராணாயாமமாகும்.

உடம்பின் உள்ளே சுழலும் பிராண வாயு வெப்பமடையும். பாம்பு வடிவில் மூலா தாரத்தில் இருக்கும் குண்டலி, வெப்பத்தினால் (வேகாத்தலை) மேலெழுந்து முதுகுத் தண்டின் வழியாகச் செல்லும். அப்போது உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களில் குண்டலி பொருந்தும் போது ஏற்படும் அதிர்வுகளை ஒலியாகக் கொண்டு, இந்த ஒலி அதிர்வுகளை ஐம்பத்தொன்று என்பர்.

ஆறு ஆதாரங்களான மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகியவற்றில் முறையே 4, 6, 10, 12, 16, 3 என 51 ஒலி அதிர்வுகளைக் குறிப்பிடுவர். இந்த

ஐம்பத்தொரு ஒலி அதிர்வையும் கேட்டு கடந்த பின்பு கம்பலம் என்னும் அருள்வெளி தோன்றும். இதனை மகாமேரு என்று குறிப்பிடுவர். அந்த இடத்தைச் சகஸ்ர தளம் என்றும் கூறுவர். அந்த இடத்திலுள்ள பிந்துவோடு குண்டலி இணையும். அதனையே சிவசக்தி ஐக்கியம் என்பர். (ஆண்+பெண்=சேர்க்கை; நாதம்+விந்து=கலப்பு எனல்)

**'நாத விந்துக லாதீ நமோநம'**


என அருணகிரி நாதர் உரைக்கக் காணலாம்.

இவ்வாறு நாதமும் விந்தும் கலக்கும் போது உருவாகும் ஊற்றை வானாறு, அமிர்தம், மாங்காய்பால், சந்திர அமிர்தம், ஆகாய கங்கை என்று குறிப்பிடுவர். எனவே, ஐம்பத்தொரு எழுத்தென்பது சாதாரண எழுத்துகளோடு தொடர்புடையதல்ல. ஆதாரங்களில் எழுகின்ற ஒலிவடிவமே எழுத்து எனக் குறிப்பிடப்படுகிறது. இது, யோகத்துடன் தொடர்புடையதென்று கூறப்படுகிறது. இவ்வாறு யோக முறையினால் சுரக்கப் பெறும் நீரை உண்டால் மரணம் தவிர்க்கப்படும் என்பது சித்தர் கொள்கை. இதுவே சித்தர் நெறியின் இலக்குமாகும். இந்த நிலையை அடையும் வழிகளைக் கூறுவதே சித்தர் இலக்கியப் பொருளாகும். இதன் உண்மைகளை அறிவியலாரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பீனியல் சுரப்பு (Pineal Gland)

பீனியல் சுரப்பி என்பது மனித மூளையின் மேல்பகுதியில் அமைந்துள்ளது. இதன் இயக்கத்தை யோகத்தின் மூலமாகச் செயல்பட வைப்பதே சித்த முறையாகும். பீனியல் சுரப்பு 14 வயது வரை வளர்ச்சியடைந்து பின்னர் அதன் வளர்ச்சிக் குன்றிவிடும்.

பீனியல் சுரப்பி மூலம் சுரக்கும் ஹார்மோன், 'மெலடோனின்' எனப்படும். மெலடோனின் எனப்படும் ஹார்மோன் மனித ஆயுளை நீட்டிக்கவும் பாதுகாக்கவும் வல்லது என்பர். இதன் சுரப்பை நீட்டிக்க வாசியோகம், குண்டலி யோகம் பயன்படுகிறது.




இச்சுரப்பு குறைந்தால் ஆயுளும் குறையும். மெலடோனின் சுரப்பை அதிகரிக்க யோகம், கற்பம் போன்றவை பயன்படுகின்றன. ஆணின் உயிர்ச்சத்தான விந்தையும், பெண்ணின் உயிர்ச்சத்தான சுரோணிதத்தைம் அடக்கினால் இச்சுரப்பியின் ஊற்று அதிகரிக்கும்.

மெலடோனின் சுரப்பின் இயக்கத்தை நீட்டிக்க வேண்டுமானால் அச்சுரப்பியின் மேல் ஒளி விழச் செய்யவேண்டும். அதற்கு குண்டலி மூலம் மூலக்கனல் என்னும் ஒளியை எழுப்பி முதுகுத் தண்டின் வழியே தலையின் உச்சிக்கு ஒளியைக் கொண்டு செல்வதே யோகமுறை.

"இதற்குத் திபேத்திய லாமாக்கள், புருவ மத்தியில் ஒட்டையிட்டுக் கொள்வதாகவும் இதன் மூலம் வெளியிலிருந்து ஒளி உள்ளே ஊடுருவிச் சென்று மெலடோனின் சுரப்பியைச் சுரக்கச் செய்வதாகவும் நம்புகின்றனர்" என்பதால், சித்தர் செயல்களில் பொதிந்துள்ள அறிவியல் உண்மைகள் விளங்கும். அறிவியல் தொடர்பு இல்லாத காலங்களிலேயே அறிவியலோடு தொடர்புடைய செயல்களைச் செய்து, மரணத்தை வெல்லும் முறைகளைக் கற்றறிந்த சித்தர்கள் அறிவியல் முன்னோடிகள் எனலாம்.

**- தொடரும்**

# வழிகாட்டுகிறது ராஜஸ்தான்!

ராஜஸ்தான் மாநில அரசு ‘பொதுமக்கள் தகவல் இணையதளம்’ என்ற புதிய சேவையைத் தொடங்கியிருக்கிறது. மாநில அரசின் 13 துறைகளைப் பற்றிய தகவல்களும் மக்களுக்குத் தேவைப்படும் விவரங்களும் அதில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. வேலை உறுதித் திட்டம், சுகாதாரம், பொது விநியோக முறை உட்பட 13 துறைகளில் அரசு அமல்படுத்திவரும் திட்டங்கள், அவற்றால் பயன்பெறும் பயனாளிகள், பொறுப்பில் உள்ள அதிகாரிகள், குறிப்பிட்ட பணி எந்த நிலையில் இருக்கிறது என்ற தகவல்களை அதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

மாவட்டங்கள், வட்டங்கள், வட்டாரங்கள் என்று அனைத்து நிலைகளிலும் பெறும் தகவல்கள் பதிவேற்றம் செய்யப்படுவதால் தேவைக்கேற்ப நாம் அதில் தெரிவுசெய்து பார்க்கலாம். திட்டங்கள் எப்படி அமலாகின்றன என்று ஆட்சியாளர்கள், அதிகாரிகள் மட்டுமல்ல, மக்களும் கண் காணிக்க இந்த ஏற்பாடு நிச்சயம் உதவும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 4(2) பிரிவு முக்கியமான ஒரு கடமையை அரசுக்கு வலியுறுத்தியிருக்கிறது. தத்தமது துறைகளில் நடைபெறும் பணிகளை மக்கள் கடிதம் எழுதித்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்று காத்திராமல் அரசே வெளியிட்டுவிட வேண்டும் என்று அது கூறுகிறது. ஆனால், இதுவரை எந்த அரசும் இந்தப் பிரிவை முழுமையாக அமல்படுத்தவில்லை. ஏராள மான துறைகள் கணினிமயமான நிர்வாகத்தைக் கடைப்பிடிக்கின்றன. கேள்விகளும் விண்ணப் பங்களும் இந்த வழியாகவே அரசு அலுவல கங்களுக்கு வரத் தொடங்கிவிட்டன.

பல்வேறு அரசுத் துறைகளும் நிறுவனங் களும் தங்களுடைய அமைப்பைப் பற்றியும் தாங்கள் நிறைவேற்றிவரும் திட்டங்கள்






குறித்தும் அவ்வப்போது பதிவேற்றம் செய்கின்றன. ஆனால், சில துறைகள் மக்கள் எதிர்பார்க்கும் தகவல்களைத் தருவதற்குப் பதிலாக அவர்கள் களைப்படைந்துபோகும் வகையில், பயனற்ற தகவல்களையும் பழைய தகவல்களையும் பதிவிடுகின்றன அல்லது அவ்வப்போது அவற்றைப் புதுப்பிப்பதில்லை.

இந்த இணையதளங்கள் மக்களுக்கு முறையாகப் பயன்தர வேண்டும் என்றால், மூத்த அதிகாரிகளும் அமைச்சர்களும் இவற்றை அடிக்கடி பயன்படுத்தி, அதில் உள்ள தகவல்களைச் சரிபார்க்க வேண்டும். வெளிப்படையான நிர்வாகம், நேர்மையான நிர்வாகம் நடத்த விரும்புவோருக்கு இவையெல்லாம் நல்ல ஆயுதங்கள்.

மக்களுக்குத் தேவைப்படும் தகவல்களைத் தருவதல்லாமல், மக்களிடம் தாங்கள் எதிர் பார்க்கும் கடமைகளையும் இவற்றின் வாயிலாக உணர்த்த அரசுகளுக்கு இது இருவழித் தகவல் பரிமாற்றக் களமாகப் பயன்படும். இணைய தளங்களின் மூலம் மக்களுடன் தொடர்பு கொள்வதை அரசுகள் வழக்கமாக்கிக்கொண்டு விட்டால், இடைத்தரகர்களின் தயவை நாட வேண்டிய தேவையும் குறையும். மக்களை யாரும் தவறாக வழிநடத்தவும் முடியாது.

**- V. அருணாச்சலம்**


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்**
**துடிப்பான, உண்மையை வெளிக்கொணர**
**சேவை மனப்பான்மையுடன்**
**பணியாற்ற மாவட்ட வாரியாக**

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

## மக்கள் விசாரணை ✷ அருணை முரசு

## Cell : 93821 33334 / 044 - 48615321

**Email : writermouriyan@gmail.com**

# ஒரே நாடு! ஒரே அட்டை!
# கை கொடுக்குமா?

வரும் 2021ம் ஆண்டில் நடத்தப்படும். இந்த மக்கள்தொகை கணக்கெடுப்பு வீடு வீடாக சென்று எடுக்கப்பட மாட்டாது. மாறாக, தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, மொபைல் ஆப் மூலம் பதிவுசெய்யப்படும், இதன் வாயிலாக ஆதார், பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம், வங்கி கணக்கு, வாக்காளர் அட்டை, பான் கார்டு உள்ளிட்ட அனைத்து ஆவணங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரே அடையாள அட்டை வழங்கப்படும். டெல்லியில் நடந்த இந்திய பதிவாளர் ஜெனரல் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையரின் புதிய கட்டிட அடிக்கல் நாட்டு விழாவில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். ஒருவர் இறந்துவிட்டால், அதுதொடர்பான விவரத்தை உடனடியாக மொபைல் ஆப் மூலம் மக்கள்தொகை பதிவேட்டில் பதிவுசெய்யும் நடைமுறையும் உருவாக்கப்படுகிறது. இதற்காக, தனி அப்ளிகேஷன் உருவாக்கப்படுகிறது. இனி, எல்லா தேவைக்கும் ஒரே அடையாள அட்டைதான் என்ற நிலையை உருவாக்க மத்திய அரசு தயாராகி விட்டது.

ஏற்கனவே, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட் உள்ளிட்ட பல்வேறு ஆவணங்கள் பெறுவதில் குழப்பம் உள்ளது. மாவட்டம் தோறும் இ-சேவை மையங்கள் மற்றும் பாஸ்போர்ட் அலுவலகங்களில் பல லட்சம் விண்ணப்பங்கள் கிடப்பில் உள்ளன. இவற்றுக்கு முழுமையாக தீர்வு காணப்படாத நிலையில், அடுத்த



நிலைக்கு செல்ல மத்திய அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. எல்லாவற்றுக்கும் ஒரே அட்டை என்பது சிறந்த வழிமுறையாக இருந்தாலும், இதை அமல்படுத்து வதற்கு முன்பு, ஏற்கனவே கிடப்பில் உள்ள




விண்ணப்பங்களை பரிசீலித்து விரைவாக தீர்வு காண வேண்டும்.

மத்திய அரசின் இந்த திட்டம், அமலுக்கு வரும்போது நாட்டில் இனி ரேஷன்கார்டு, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, பான் கார்டு என எதுவும் இருக்காது. முகவரி மற்றும் புகைப்பட அடையாளமாக ஒரே அட்டைதான் அமலில் இருக்கும். நாட்டின் கடைசி நபரின் வளர்ச்சி மற்றும் நாட்டின் எதிர்கால பணிகளை ஒருங்கிணைக்க இது அவசியம் என்கிறது மத்திய அரசு. வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பத்தில் இனி எல்லாம் டிஜிட்டல் மயம்தான். அதில், மாற்றம் இல்லை. அதே நேரத்தில், தனி மனித சுதந்திரம் பறிக்கப்படாத வகையிலும், ஊழல், முறைகேடுகளை தடுக்கும் வகையிலும் இப்புதிய திட்டம் நடைமுறைக்கு வந்தால் நல்லது.

**- அகிலாண்டேஸ்வரி**




# வரிகுறைப்பால் மட்டும் முன்னேற்றம் ஏற்படுமா?

இந்தியத் தொழில் நிறுவனங்கள் நீண்ட காலமாகக் கோரிவந்த நிறுவன வரிவிகிதத் குறைப்பை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்ததும் பங்குச் சந்தை உச்சம் தொட்டு விட்டது. இந்தியத் தொழில் துறையினர் இந்நட வடிக்கையை மிகவும் வரவேற்றுள்ளனர். அது மட்டுமல்ல; கடந்த ஜூலையில் நிதிநிலை அறிக்கை யைத் தாக்கல் செய்தபோது அறிவித்த, சந்தைக்கு அதிருப்தி அளித்த சில நடவடிக்கைகளும் திரும்பப் பெறப்பட்டுள்ளன பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு, முதலீடு என்று எல்லாம் சரிந்துவரும் வேளையில் அவற்றை மீட்சி பெறச் செய்ய அடுத்தடுத்து எடுத்துவரும் நடவடிக்கைகளில் இது மிகவும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

வரி செலுத்துவதில் எந்தவித விதிவிலக்கு சலுகையும் பெறாத தொழில் நிறுவனங்கள் செலுத்திவந்த வரி 30%-லிருந்து 22% ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்நிறுவனங்கள் மீதான உண்மை வரி 34.94%-லிருந்து 25.17% ஆகக் குறைந்துள்ளது. அக்டோபர் 1-க்குப் பிறகு பதிவு செய்துகொண்டு 2023 மார்ச் 31-க்குப் பிறகு உற்பத்தியைத் தொடங்கவிருக்கும் புதிய நிறுவனங்கள் மீதான வரி இப்போதுள்ள 25%-லிருந்து 15% ஆகிறது. இந்த வரிக் குறைப்புகள் தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. தொழில் துறையில் குறைந்துவரும் முதலீட்டைப் பெருக்கும் நோக்கில் வரி குறைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி சீன-அமெரிக்க காப்பு வரி விதிப்புப் போரால் திகைப்படைந்திருக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்தியாவை நோக்கி வருவதற்கும் இது நிச்சயம் கைகொடுக்கும்.

அரசு எடுத்துள்ள நிறுவன வரிக் குறைப்பால் அரசுக்குக் கிடைக்க வேண்டிய வரி வருவாயில் ரூ.1,45,000 கோடி துண்டு விழும் என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்திருக் கிறார். ஜிஎஸ்டி வரி வருவாய், அரசு எதிர்பார்த் ததைப் போல மாதத்துக்குச் சராசரியாக ஒரு லட்சம் கோடி ரூபாயைத் தாண்டவில்லை. ஜிஎஸ்டி உட்பட எல்லாவிதமான வரிகள் மூலமும் ரூ.16.49 லட்சம் கோடி கிடைக்கும் என்று 2019-20 பட்ஜெட் கூறியது. ஆனால், உண்மையில் வரி வருவாய் ரூ.13.16 லட்சம் கோடியாகத்தான் இருக்கிறது. இப்போதைக்கு நிலைமையைச் சமாளிக்க ரிசர்வ் வங்கி விடுவித்துள்ள உபரி நிதி ரூ.1.75 லட்சம் கோடி கைகொடுக்கும். அதனால் வருவாய்ப் பற்றாக்குறை இப்படியே இருக்கட்டும் என்று அனுமதித்துவிட முடியாது.

அரசின் செலவுக்கு ஏற்ப வருவாயைப் பெருக்கினால்தான் இந்திய நிதி நிலைமை மீது சர்வதேச அரங்கில் நம்பகத்தன்மை தொடரும். இப்போதுள்ள நிலையில் எந்த வரியையும் உயர்த்த முடியாது. நிறுவனங்கள் மீதான வரியைக் குறைத்திருப்பது நடுத்தரக் காலத்துக்கு நல்ல பலனை அளிக்கும். ஆனால், குறுகிய காலத் தேவைகளுக்கு வருவாயைப் பெருக்கியாக வேண்டும். வரிக் குறைப்பு அறிவிப்பால் அரசின் பிரச்சினைகள் தீர்ந்துவிடவில்லை. மாறாக, செலவுக்கு ஏற்ப வருவாயைப் பெருக்கி சமப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

**- ஆசிரியர்**

# தீர்வு கிடைக்குமா? நதிநீர் பிரச்சனை?

கேரள முதல் வர் பினராயி விஜயனை தமிழக முதல்வர் பழனிசாமி சந்தித்து, முல்லை பெரியாறு உள்ளிட்ட நதிநீர் பிரச்சினைகள் குறித்து பேச்சு வார்த்தை நடத்தினார். இரு மாநில நதிநீர் பிரச்சினைகள் அனைத்தை யும் தீர்க்கும் வகையில் மாநிலத் துக்கு தலா 5 பேர் என 10 பேர் கொண்ட குழு அமைத்து ஆய்வு மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது. பரம்பிக்குளம் - ஆழியாறு திட்ட ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தமிழகம், கேரளா இடையே முல்லை பெரியாறு, பரம்பிக்குளம்- ஆழியாறு, நெய்யாறு உள்ளிட்ட பல்வேறு நதிநீர் பிரச்சினைகள் பல ஆண்டுகளாக தீர்க்கப்படாமல் உள்ளன.



இந்நிலையில், கேரள நீர்ப்பாசன னத் துறை அமைச்சர் கிருஷ்ணன் குட்டியை தமிழக சட்டப்பேரவை துணைத் தலைவர் பொள்ளாச்சி ஜெயராமன் சமீபத்தில் சந்தித்துப் பேசினார். அப்போது, நதிநீர் பிரச் சினைகள் குறித்து இரு மாநில முதல்வர்களும் செப்டம்பர் 25-ம் தேதி திருவனந்தபுரத்தில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பது என முடிவு செய்யப் பட்டது. அதன்படி, கேரள முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக முதல்வர் பழனிசாமி சென்னையில் இருந்து நேற்று காலை



10.45 மணிக்கு விமானத்தில் திருவனந்தபுரம் புறப்பட்டுச் சென்றார். அவருடன் சட்டப் பேரவை துணைத் தலைவர் பொள்ளாச்சி ஜெயராமன், அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, தலைமைச் செயலர் கே.சண் முகம், நகராட்சி நிர்வாகத் துறை செயலர் ஹர்மந்தர் சிங், பொதுப்பணித் துறை செயலர் மணிவாசன் உள் ளிட்ட 17 பேர் கொண்ட குழுவினர் சென்றனர்.

திருவனந்தபுரம் கிழக்கு கோட்டை சாலையில் உள்ள மஸ்கட் ஓட்டலில் பிற்பகல் 3 மணிக்கு பேச்சு வார்த்தை நடந்தது. கேரளா சார்பில் முதல்வர் பினராயி விஜயன், அமைச் சர்கள் கே.கிருஷ்ணன் குட்டி, எம்.எம். மணி, கே.ராஜூ, தலைமைச் செயலர் டாம் ஜோஸ் உள்ளிட்ட 17 பேர் பங்கேற்றனர். முன்னதாக, பினராயி விஜயனிடம் நதிநீர் பிரச் சினைகள் குறித்த தமிழகத்தின் முன்மொழிதல் கடிதத்தை முதல்வர் பழனிசாமி அளித்தார். அதன்பின், 2 மணி நேரம் இரு தரப்பு பேச்சு வார்த்தை நடந்தது.

பேச்சுவார்த்தைக்குப் பிறகு இரு மாநில முதல்வர்களும் செய்தி யாளர்களுக்கு கூட்டாக பேட்டி அளித்தனர். கேரள முதல்வர் பினராயி விஜயன் கூறியதாவது: தமிழக முதல்வரின் முன்முயற்சி யால், இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது. பேச்சுவார்த்தையில் அனைத்து விஷயங்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது. கேரளாவும் தமிழகமும் இரு மாநிலங்களாக இருந்தாலும், மக்கள் எந்த வித் தியாசமும் இன்றி சகோதரர்களாக உள்ளனர். இதனால் எந்தப்

பிரச்சினையாக இருந்தாலும் பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு காணும் வகையில்தான் உள்ளது.

இன்றைய பேச்சுவார்த்தையில் ஒவ்வொரு விஷயம் குறித்தும் தனித் தனியாக தீர்மானம் எதுவும் எடுக்க வில்லை. அதே நேரத்தில் எல்லா விஷயத்திலும் பொதுவாக என்ன செய்யலாம் என ஆலோசிக்கப் பட்டது. பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டத்துக்கான ஒப்பந்தம் செய்து 60 ஆண்டுகளாகிவிட்டது. இந்த ஒப்பந்த்தை மறுஆய்வு செய்ய இருதரப்பிலும் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. இதற்காக இரு மாநிலங்களிலும் தலா 5 பேர் கொண்ட குழு ஒரு வாரத்தில் அமைக் கப்பட்டு, அவர்கள் சந்திப்பு எப் போது நிகழும் என்பது குறித்தும் முடிவெடுக்கப்படும். ஆனைமலை யாறு, நீராறு, நல்லாறு, மணக்கடவு தொடர்பாகவும் அந்தக் குழுவே பேச்சுவார்த்தை நடத்தும்.



முல்லை பெரியாறு அணை விவ காரத்தை பொறுத்தவரை அங்கு மின்சாரம் உள்ளிட்ட வசதிகளை வழங்குவதற்கு முடிவு எடுக்கப்பட் டுள்ளது. 2 மாநில தலைமைச் செய லர்களும் 6 மாதத்துக்கு ஒருமுறை கூடி பேச்சுவார்த்தை நடத்துவர். பாண்டியாறு - புன்னம்புழா திட்டம் தொடர்பாக மின்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் குழு தனியாக அமைக் கப்படும். இரு மாநிலம் தொடர்பான பிரச்சினைகளும் குழுவின் முக்கிய விவாதப் பொருளாக வைத்து தர்க்கம் மேற்கொள்ளாமல் அதற்கு தீர்வு எட்டப்படும். இது ஒரு நல்ல தொடக்கமாகும். தமிழக மக்களுக் கான தண்ணீர் பிரச்சினையில் முடி வெடுக்க வேண்டிய விஷயம் என்ப தால்,



பேச்சுவார்த்தை நடத்திய தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு பினராயி விஜயன் கூறினார்.

தமிழக முதல்வர் பழனிசாமி கூறியதாவது: தமிழகம் - கேரளா இடையிலான நதிநீர் பங்கீடு பேச்சுவார்த்தை 15 ஆண்டுகளுக்குப் பிறகு சுமூகமாக நடந்துள்ளது. பரம்பிக்குளம்- ஆழி யாறு திட்டம் தொடர்பாக இரு மாநிலத்திலும் தலா 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு, அக்குழு ஆய் வின் அடிப்படையில் திட்டம் நிறைவேற்றப்படும். பாண்டியாறு - புன்னம்புழா திட்டத்தையும் நிறை வேற்ற தனிக் குழு அமைக்கப் படுகிறது. இந்தக் குழு ஆய்வு செய்து திட்டம் நிறைவேற்றப்படும். ஆனைமலையாறு, நீராறு, நல்லாறு, சிறுவாணி பிரச்சினைகளுக்கும் இக்குழு மூலம் தீர்வு காணப்படும்.

முல்லை பெரியாறு அணையை பொறுத்தவரை ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி யுள்ளது. அதில் உள்ள பிரச்சினை குறித்து ஆய்வு செய்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முயற்சி மேற் கொள்ளப்படும். இரு மாநில விவ சாயிகள், மக்களுக்குத் தேவையான நீரை முறைப்படி பங்கிட்டு வழங்கத்தான் இந்த ஆலோசனை நடந்துள்ளது. எவ்வித பாகுபாடு மின்றி கேரள, தமிழக மக்கள் ஒன்றாக இணைந்து செயல்படும் சூழல் இன்று உருவாகியுள்ளது. இன்னும் பல்வேறு சிறு பிரச்சினைகளும் குழுவின் மூலம் பேசித் தீர்க்கப்படும். முதல்கட்டமாக பேச்சு வார்த்தையை தொடங்கியுள்ளோம். இரு மாநிலங்களின் துறை செயலாளர்கள் தலைமையில் குழு அமைக்கப்படும். இவ்வாறு முதல்வர் பழனிசாமி தெரிவித்தார்.

**- S. சரவணன்**

# உலகை திரும்பிப் பார்க்கவைத்த தொல்லியல் துறை!

உலகெங்கும் உள்ள தமிழ்ச் சமூகத்தின் கவனத்தை ஈர்த்திருக்கிறது, தமிழக அரசின் தொல்லியல் துறை வெளியிட்ட கீழடி தொடர்பான அறிக்கை. "கீழடியில் கிடைத்த கட்டுமான அமைப்புகள் முதிர்ச்சி பெற்ற சமூகத்தின் அடையாளம். எழுத்தறிவும், சிறந்த கைவினைத் தொழில்நுட்பமும், உள்நாடு மற்றும் வெளிநாடு வணிக வளமும் கொண்ட இந்நாகரிகத்தின் காலம் கிமு 600" என்று அது கூறுகிறது. அதாவது, கீழடியின் வயது 2600 என்று கூறும் அந்த அறிக்கை, அந்தக் காலகட்டத்திலேயே எழுத்தறிவு பெற்ற சமூகமாக தமிழ்ச் சமூகம் இருந்ததையும் விரிவான ஆதாரங்களோடு நிறுவ முயல்கிறது. ஆனால், தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மேற்கண்ட முயற்சியின் விளைவு இது என்பதையும், கீழடியை அணுகும் விதத்தில் இனியேனும் மத்திய அரசு சிறப்புக் கவனம் அளிக்க வேண்டும் என்பதையும் இங்கு நாம் அழுத்திச் சொல்ல வேண்டியிருக்கிறது.



நான்காண்டுகளாக கீழடியில் ஆய்வு நடந்திருக்கிறது. மத்திய தொல்லியல் துறை முதல் மூன்றாண்டுகள் ஆய்வுகளை நடத்தியது. அதில் முதல் இரண்டு ஆண்டுகள் ஆய்வுகளை நடத்திய அமர்நாத் இராமகிருஷ்ணன் குழு 102 குழிகள் அகழ்ந்தது. அவற்றில் கிடைத்த சான்றுகளின் அடிப்படையில், 2017 பிப்ரவரியில் இடைக்கால அறிக்கை கொடுத்தார் அமர்நாத் இராமகிருஷ்ணன். 'தமிழகத்தில் முதன்முறையாக நகர நாகரிகத்துக்கான விரிவான கட்டுமானங்கள் கிடைத்திருக்கின்றன' என்று அவர் குறிப்பிட்டார்.

விரைவிலேயே அவர் பணியிடம் மாற்றப்பட்டார். மூன்றாவது ஆண்டில் ஆய்வுகளை நடத்திய ஸ்ரீராமன், வெறும் 10 குழிகளை மட்டுமே அகழ்ந்தார். 'புதிய ஆதாரங்களோ, கட்டுமானத்தின் தொடர்ச்சியோ கிடைக்கவில்லை; புதிய சான்றுகளும் எதுவும் கிடைக்கவில்லை' என்று ஒரு பக்க அறிக்கையை மத்திய அரசுக்கு அவர் அனுப்பினார். அந்த அறிக்கையின் அடிப்படையில் கீழடி ஆய்வை முடித்துவிட்டு வெளியேறியது மத்திய தொல்லியல் துறை.

இந்தக் கட்டத்திலிருந்துதான் நான்காம் ஆண்டில் சிவானந்தம் தலைமையில், தன்னுடைய அகழாய்வைத் தொடங்கியது தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை. 34 குழிகளில் நடத்தப்பட்ட இந்த அகழாய்வில் கிடைத்த சான்றுகளை உயரிய ஆய்வு நிறுவனங்கள் பார்வைக்கு அனுப்பி, அவர்கள் அளித்த மதிப்பீட்டின்படியே தன்னுடைய அறிக்கையை அது சமீபத்தில் சமர்ப்பித்தது. ஒரு ஆண்டில் கிடைத்த சான்றுகளே மறு ஆண்டும் கிடைக்கும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. முதல் ஆண்டில் விரிவான ஆதாரங்கள் கிடைத்து, மறு ஆண்டில் எதுவும் கிடைக்காமலும் போகலாம். ஆய்வு என்பது இவை அனைத்தையும் உள்ளடக்கியதுதான். இன்னும் துல்லியமாகச் சொல்லப்போனால், சான்றுகள் என்று எது கருதப் படுகிறதோ அது கிடைத்த இடத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறதோ அதே அளவு சம முக்கியத்துவம் பெற்றதுதான் கிடைக்காத இடமும். சான்றுகள் கிடைத்த இடத்துக்கும் கிடைக்காத இடத்துக்கும் உள்ள வேறுபாடுகளைப் பற்றி தொல்லியல் அறிஞர்கள் விவாதிக்கட்டும். நாம் எழுப்ப வேண்டிய கேள்வி, இந்த அறிக்கைகள் அடிப்படையில் அரசு எடுக்கும் முடிவுகள் தொடர்பில்தான்.

ஏற்கெனவே, கீழடி ஆய்வில் தீவிரமான ஆர்வம் காட்டிவந்த அமர்நாத் இராமகிருஷ்ணன் அங்கிருந்து பணிமாற்றம் செய்யப்பட்டது உள்ளூர் மக்களிடம் அதிருப்தியையும் சந்தேகத்தையும் உண்டாக்கிய நிலையில், புதிதாகப் பொறுப்பேற்ற ஸ்ரீராமன், கீழடி ஆய்வையே முடிக்கும் அளவுக்குக் கொடுத்த அறிக்கையையேனும் மத்திய அரசு கேள்விக்குட்படுத்தியிருக்கலாம். "ஒரு வருஷம் முழுக்கவுமே வெறும் 10 குழிகள் அளவுக்கு மட்டுமே



அகழாய்வு நடத்த முடிந்ததா? ஓராண்டில் இந்த ஆய்வுக்காகக் கொடுக்கப்பட்ட பணத்தில் மூன்றில் ஒரு பங்கைக்கூட நீங்கள் ஏன் செலவிடவில்லை? இன்னும் கொஞ்சம் முயன்றுபார்க்கலாமா?" என்றுகூடக் கேட்காமல் ஸ்ரீராமன் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் அப்படியே கீழடியைக் கைவிட்டது மத்திய அரசு.

இப்போது மாநிலத் தொல்லியல் துறை நடத்தியிருக்கும் ஆய்வு கீழடியின் முக்கியத்துவத்தை ஒட்டுமொத்த நாட்டுக்கும் உணர்த்தியிருக்கும் சூழலிலேனும், கீழடியை இனி கூடுதல் முக்கியத்துவத்துடன் அணுக முற்பட வேண்டும். முழு ஆய்வையும் முடிக்காமல் ஒரு அதிகாரி கொடுக்கும் அறிக்கையின் அடிப்படையில் ஆய்வை முடித்துக்கொள்ளும் போக்கைக் கைவிட வேண்டும். கீழடியில் உள்ள தொல்லியல் மேடு என்பது தனித்த ஒன்றல்ல, 110 ஏக்கர் கொண்ட அம்மேட்டுக்குப் பக்கத்தில் 90 ஏக்கரில் இன்னொரு மேடு உள்ளது. கீழடியைச் சுற்றி கொந்தகை, மணலூர், அகரம் ஆகிய கிராமங்களும் இதே அளவு தொல்லியல் எச்சங்களோடு உள்ளவை என்று கருதப்படுபவை.

இவை அனைத்தும் ஒரே குவிமைய நிலப்பரப்பு என்பது இங்கு நாம் கவனிக்க வேண்டியதாகும். ஒரு பெரும் நீர்நிலையைச் சுற்றிய நிலவியல் அமைப்பாக இது இருந்திருக்கலாம். வைகையின் நீரைக் கால்வாய் வழியாக இரண்டு கிமீ தூரம் பிரித்து வந்து, நீர் தேக்கி வேளாண்மையில் ஈடுபட்டவர்களாக அங்கு வாழ்ந்தவர்கள் இருந்திருக்கலாம். ஆனால், இவையெல்லாம் தொடர் ஆய்வுகளில் நிறுவப்பட வேண்டியவை.

ஆகவே, கீழடியைச் சுற்றியுள்ள இப்பகுதியைப் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கும் பணி முதன்மையானது. உத்தர பிரதேசத்தில் பாக்பத்தில் உள்ள சனவுலி கிராமத்தில் 28.67 ஏக்கர் நிலத்தைப் பாதுகாக்கப்பட்ட நிலமாக சில நாட்களுக்கு முன் மத்திய தொல்லியல் துறை அறிவித்துள்ளதை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். அங்கு கடந்த ஆண்டு மத்திய தொல்லியல் துறை நடத்திய அகழாய்வில் பழங்காலச் சவப்பெட்டிகளும் கல்லறைகளும் கிடைத்துள்ளன. அவற்றின் காலத்தைக் கணிக்கக் காலப் பகுப்பாய்வுக்கு மாதிரிகள் அனுப்பப்பட்டுள்ளன. ஆனால், அவற்றின் முடிவுகள் வருவதற்கு முன்பே அவ்விடத்தைப் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்திருக்கிறது மத்திய தொல்லியல் துறை.

ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகளாக 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொல்லியல் பொருட்களும் கட்டுமானச் சான்றுகளும் கண்டுபிடிக்கப்பட்டு, ஒன்றுக்கும் மேற்பட்ட முறை காலப் பகுப்பாய்வுக்கு மாதிரிகளை அனுப்பி, கால நிர்ணயம் செய்யப்பட்ட கீழடியின் ஆய்வுக்குரிய நிலம் இன்னும் பாதுகாக்கப்பட்ட நிலமாக அறிவிக்கப்படவில்லை.

அடுத்து, கீழடியில் சர்வதேசத் தரத்தில் ஒரு அருங்காட்சியகமும் அமைக்கப்பட வேண்டும். கீழடியில் ஆய்வு தொடங்கப்பட்ட அதே காலகட்டத்தில், அகழாய்வு தொடங்கப்பட்டதும் பிரதமர் மோடியின் சொந்த நகரமான குஜராத்தின் வட் நகரில் இதுவரை கிடைத்த பொருட்களைக் கொண்டு, சர்வதேசத் தரத்தில் மெய்நிகர் அருங்காட்சியகம் அமைக்க சர்வதேச ஒப்பந்தப்புள்ளியை மத்திய தொல்லியல் துறை கோரியுள்ளதை இங்கு சுட்டிக் காட்டலாம். மத்திய அரசிடம் இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்துவது மாநில அரசின் கடமையும் கூட. கீழடியில் கிடைத்த எலும்பை டெக்கான் கல்லூரிக்குப் பகுப்பாய்வுக்கு அனுப்பியதில், அது திமிலுடைய காளையின் எலும்பு என ஆய்வு முடிவுகள் கூறுவதாகச் சொல்கிறது தமிழக தொல்லியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கை.

**- குருதேவ்**

# சிந்தனை முத்துக்கள்





ஒரு ஆணின்
உண்மையான
குணத்தை தண்ணி
அடிக்கும் போதும்,

ஒரு பெண்ணின்
உண்மையான
குணத்தை தண்ணி
பிடிக்கும் போதும்..

தெரிந்து
கொள்ளலாம்..!

முள் குத்தினாலும் கத்தும்
நாம்,
டாக்டர் ஊசி போடும்போது
மட்டும் தாங்கிக்குவோம்...

வலி என்னமோ ஒன்னுதான்
ஏற்றுக் கொள்ள
துணிந்துவிட்டால்
வலிகளும்,வேதனைகளும்
தூசிதான்...!








## பொன்மொழி

தவறு என தெரிந்ததும்
மன்னிப்பு கேட்டு விடுங்கள்.
சமாளிக்கிறேன் என்ற பெயரில்
இன்னொரு தவறை செய்யாதீர்கள்...




அம்மாவின் சமையலில்
குறை இருப்பினும்
காட்டிக் கொள்ளாதே..



ஏனெனில் சிலருக்கு
அம்மா இல்லை,
பலருக்கு உணவே இல்லை,



**இன்றைய லட்சியம் நாளைய மாற்றம்!**
**இன்றைய அலட்சியம் நாளைய ஏமாற்றம்!**
**பகிர்ந்த துன்பம் பாதியாகிறது!**
**பகிர்ந்த இன்பம் இரட்டிப்பாகிறது!**






















ஐக்கிய நாடுகள் சபையின், 74ம் ஆண்டு பொது சபை கூட்டம், அமெரிக்காவின் நியூயார்க் நகரில், கடந்த 24ம் தேதி நடந்தது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக, 21ல் பிரதமர் மோடி, அமெரிக்கா சென்றார்.அங்கு, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மோடி, ஐ.நா., பொது சபை கூட்டத்துக்கு இடையே, பல்வேறு நாடுகளின் தலைவர்களை சந்தித்து, இருதரப்பு உறவுகள் பற்றி பேசி வருகிறார். நேற்று முன்தினம், ஐரோப்பிய நாடான ஆர்மேனியா, பசிபிக் தீவு நாடான நியூசிலாந்து நாடுகளின் பிரதமர்களை,பிரதமர் மோடி சந்தித்தார்.

ஆர்மேனியா பிரதமர், நிகோல் பஷின்யானை சந்தித்த மோடி, ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து



# மோடி வெளிநாடு சுற்றுவதால் மட்டும்

வழங்க, ஆர்மேனியா தொடர்ந்து அளித்து வரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார். இந்தியா - ஆர்மேனியா இடையே, தொழில்நுட்பம், மருத்துவம், விவசாயம் தொடர்பான தொழிற்சாலைகள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது பற்றி, இரு நாட்டு தலைவர்களும் விவாதித்தனர். ஆர்மேனியாவில், இந்திய திரைப்படங்கள், இசை, யோகா ஆகியவை மிகப் பிரபலமாக இருப்பதாக, மோடியிடம், பஷின்யான் தெரிவித்தார். மேலும், ஆர்மேனியாவுக்கு வரும்படி பஷின்யான் விடுத்த அழைப்பை, மோடி ஏற்றுக் கொண்டார்.

நியூசிலாந்து பிரதமர், ஜசிந்தா ஆர்டனை சந்தித்த பிரதமர் மோடி, இரு தரப்பு உறவுகள் பற்றி பேசினார். பயங்கரவாத பிரச்னையில், இரு நாடுகளும் ஒருமித்த கருத்து கொண்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். நியூசிலாந்தில் உள்ள இந்தியர்கள் மற்றும் இந்திய மாணவர்கள், இரு நாடுகளுக்கு இடையே பாலமாக திகழ்வதாக, ஜசிந்தா தெரிவித்தார்.

எஸ்டோனியா அதிபர், கெர்ஸ்டிகல் கெல்ஜுலைட், பெல்ஜியன் பிரதமர், சார்லஸ் மைக்கேல் ஆகியோரையும், பிரதமர் மோடி சந்தித்து பேசினார். இதன் பின், அமெரிக்காவின் நியூயார்க் நகரில், அந்நாட்டு தொழில், வர்த்தக குழுக்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார். புளும்பெர்க் வர்த்தக அமைப்பு உள்ளிட்ட வர்த்தக குழுக்கள், இந்த கூட்டத்தில் பங்கேற்றன.

அப்போது, மோடிபேசியதாவது: இந்தியாவில், எந்தவொரு துறையிலும் முதலீடு செய்யலாம். வளரும் சந்தையில் முதலீடு செய்ய விரும்பினாலோ, தற்கால நவீனங்கள் ஏற்கப்படும் சந்தை யில் முதலீடு செய்ய விரும்பினாலோ, நீங்கள் இந்தியாவுக்கு வரலாம். இந்தியாவில், புத்தாக்க நிறுவனங்கள் நிறைந்த சந்தை உள்ளது. இதுவும் முதலீட்டாளர்களுக்கு சாதகமானதாகும்.

உள்கட்டமைப்பு மற்றும் மனை வணிகத்துறையில், முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், இந்தியா, 'ஸ்மார்ட் சிட்டி' களை உருவாக்கி வருகிறது.அதன் வாயிலாக, எங்களது நகரங்களை, மிக வேகமாக நவீனப்படுத்தி வருகிறோம். குடிமக்களுக்கு எளிதில் பயன்படக் கூடிய வகை யிலான உள்கட்டமைப்புகளுடன், அந்த நகரங்கள் கட்டமைக்கப்படுகின்றன. எனவே, நகரமயமாதல் நடவடிக்கைகளில் முதலீடு செய்ய விரும்பினால், அதற்கு ஏற்ற நாடாகவும் இந்தியா இருக்கும்.

இந்தியாவின் ராணுவத் துறையில், 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் வாயிலாக முதலீடு செய்ய முடியும். இந்தியாவின் ராணுவத்துறை, முன்னெப்போதும் இல்லாத வகையில், முதலீடுகளுக் காக திறக்கப்பட்டுள்ளது.தொழில் செய்ய உகந்த நாடுகளின் தரவரிசையில், 2014-ம் ஆண்டில் இருந்து இந்தியா, 65 இடங்கள் முன்னேற்றம் கண்டுள்ளது. அரசியல் மற்றும் பண மதிப்பின் ஸ்திரத்தன்மை காரணமாகவே, இது சாத்தியமானது.

அரசியல் ஸ்திரத்தன்மை, பண மதிப்பில் ஸ்திரத்தன்மை, உயர்தர பொருட்கள், ஊழலுக்கு



பிரதமருடன் பேசும்போது, 'காஷ்மீர் விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்யத் தயார்' என, டிரம்ப் கூறுகிறார்.

இந்நிலையில், காஷ்மீர் விவகாரம் பற்றி, டிரம்ப் கூறியதாவது: காஷ்மீர் விவகாரம் தொடர்பாக, இந்தியா மற்றும் பாகிஸ்தான் தலைவர்களிடம் பேசினேன். இந்த பிரச்னையில் மத்தியஸ்தம் செய்யவோ, சமரசம் ஏற்படுத்தவோ தயார் என, அவர்களிடம் தெரிவித்தேன். எனினும், இதற்கு, இரு நாடுகளும் சம்மதித்தால் மட்டுமே வாய்ப்புண்டு. இரண்டுமே,அணு ஆயுதங்கள் வைத்துள்ள அண்டை நாடுகள். அவர்கள் பிரச்னைகளை பேசி தீர்ப்பர் என, நம்புகிறேன். இவ்வாறு, டிரம்ப் கூறினார்.

# பொருளாதாரம் ஏற்றம் பெறுமா?

எதிரான நடவடிக்கைகள், குறைந்த உற்பத்தி செலவு, உள்ளிட்ட, 10 காரணிகளைக் கொண்டு, ஆசிய அளவில் நாடுகள் மதிப்பிடப்படுகின்றன. இந்த மதிப்பீட்டில், இந்தியா, ஏழு காரணிகளில் சிறப்பாக விளங்குவதால், ஆசிய அளவில் முதலிடத்தில் உள்ளது.அணுசக்திஉங்களுடைய தொழில்நுட்பமும், எங்களுடைய திறமையும் இணைந்தால், இந்த உலகத்தை மாற்ற இயலும். நம் ஒத்துழைப்பின் மூலம், உலக பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்ய இயலும்.

அணுசக்தியை பயன்படுத்தி எரிபொருள் தயாரிப்பது, இந்தியாவுக்கு இன்றும் சவாலாக உள்ளது. அணுசக்தி வினியோக நாடுகள் கூட்டமைப்பில், இந்தியா உறுப்பினராக இல்லாததே இதற்கு காரணம்.அந்த வாய்ப்பு இந்தியாவுக்கு கிடைத்தால், உலகிற்கே முன்னுதாரணமாக நாங்கள் திகழ்வோம். அதை நோக்கி, நாங்கள் நகர்கிறோம்.இவ்வாறு, பிரதமர் மோடி பேசினார்.

''இந்தியா, பாகிஸ்தான் இரண்டும் அணு ஆயுத நாடுகள்; காஷ்மீர் விவகாரத்தை, அவர்கள் சரியான முறையில் பேசி தீர்ப்பர் என்ற நம்பிக்கை உள்ளது,'' என, அமெரிக்க அதிபர், டிரம்ப் கூறினார்.காஷ்மீர் விவகாரத்தில், மூன்றாவது நாடு தலையிடுவதை ஏற்க முடியாது என, இந்தியா பலமுறை தெரிவித்தும், அமெரிக்க அதிபர், டிரம்ப் மத்தியஸ்தம் செய்ய தயார் என, தொடர்ந்து கூறி வருகிறார்.

பிரதமர் மோடியை சந்தித்த போதெல்லாம், 'காஷ்மீர் விவகாரம், இந்தியாவின் உள்நாட்டு விவகாரம்' என கூறிவிட்டு, பாகிஸ்தான்

இது பற்றி, இந்திய வெளியுறவு செய்தி தொடர்பாளர், ரவீஷ் குமார் கூறுகையில், ''காஷ்மீர் விவகாரத்தில், இந்தியாவின் நிலை, மிகவும் தெளிவாக, உறுதியாக உள்ளது. இது பற்றி, பிரதமர் மோடியும், ஏற்கனவே கூறிவிட்டார். பாக்.,குடன் பேச்சு நடத்த, இந்தியா தயங்கவில்லை. ஆனால், அதற்கு பயங்கவாதத்தை ஒழிக்கும் உறுதியாக நடவடிக்கைகளை, பாகிஸ்தான் எடுக்க வேண்டும்,'' என்றார்.



நியூயார்க்கில், இந்திய - கரீபிய முதல் மாநாடு, நேற்று முன்தினம் நடந்தது. இதில், பிரதமர் மோடியும், கரீபியன் கடற்பகுதியில் அமைந்துள்ள, 15 நாடுகளின் தலைவர்களும் பங்கேற்றனர். கரீபியன் நாடுகளின் நலத் திட்டங்களுக்கு, 1,000 கோடி ரூபாய் மானியமாக வழங்குவதாக, பிரதமர், மோடி தெரிவித்தார். மேலும், சூரிய மின்சக்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தட்பவெப்ப மாற்றம் தொடர்பான பணிகளுக்காக, 1,100 கோடி ரூபாய் கடன் வழங்குவதாகவும், மோடி தெரிவித்தார்.

**- A D. ராஜேந்திரன்**



## தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கத்தின்

# பிரம்மாண்டமான 4வது மாநில மாநாடு

தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கத்தின் 4வது மாநில மாநாடு செப்டம்பர் 15 அன்று காலை 10 மணி முதல் மதியம் 2 மணிவரை சென்னை விருகம்பாக்கத்தில் உள்ள டால்பின் ஹோட்டலில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

மாநாடு கல்விடுடே ஆசிரியரும், சங்கத்தின் மாநில தலைவருமான திரு.ரி.ராமசுப்ரமணியன் தலைமை தாங்க, மக்கள் விசாரணை ஆசிரியரும், சங்கத்தின் மாநில பொதுச்செயலாளருமான முனைவர் திரு.ஆ.மகுரியன் மற்றும் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் திரு.A.C.குமார் இணைந்து வரவேற்புரை நல்க, அரசியல் தீர்ப்பு நிர்வாக ஆசிரியரும் சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளருமான திரு.V.அருணாச்சலம் மற்றும் பீபிள் டுடே ஆசிரியரும், சங்கத்தின் மாநில கௌரவத்தலைவருமான திரு.G.சத்தியநாராயணன் முன்னிலை வகிக்க விழா எழிலுடன் தொடங்கியது. தொலைக்காட்சி நெறியாளர் திரு.A.ஞானதன்ராஜ், இந்திரா காந்தி நேஷனல் ஓப்பன் யுனிவர்சிட்டியின் உதவி மண்டல இயக்குநர் திரு.Dr.D.M.பீர்ரால் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டதோடு மாநாட்டினை வாழ்த்தி பேசினார்கள்.

ஃபோர்த் பில்லர் ஆஃப் இந்தியன் ஜெர்னலிஸ்ட்














கவுன்சிலின் இயக்குநர், வழக்கறிஞர் முனைவர் ம.சிவசங்கரன் தனது திருக்கரங்களால் ஏராளமான பத்திரிகையாளர்களுக்கு தலைக்கவசம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அவருடன் இணைந்து சங்கத்தின் மாநில கௌரவ செயலாளர் திரு.ரமேஷ்குமார் மற்றும் மாநில பொருளாளர் திரு.V.சங்கர் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி மகிழ்ந்தனர்.

விழாவிற்கு முத்தாய்ப்பாக புதுதில்லி (சி – ஏஜி ஆஃப் இந்தியா) சயின்டிபிஃக் டிபார்ட்மென்ட்ஸ் ஓய்வு பெற்ற சீனியர் ஆடிட் ஆபிசர் திரு.P.ஆறுமுகம் அவர்கள் விழாப் பேருரை ஆற்றியதோடு பத்திரிகைத் துறையில் தொடர் தொண்டாற்றி வரும் பத்திரிகையாளர்களுக்கு "சிறந்த பத்திரிகை எழுத்தாளர்" விருதினை வழங்கி வாழ்த்தினார்.

விழாவிற்கு வருகை தந்த "முற்றம்" பத்திரிகை ஆசிரியர் திரு.வே.தளபதி, "அரசியல் முத்திரை" ஆசிரியர் ம.செல்வம், "ரிப்போர்ட்டர் விஷன்" ஆசிரியர் V.C.P. அம்பலவாணன், "சிங்காரச் சென்னை" ஆசிரியர் ரங்கநாதன், "FB நியூஸ்" ஆசிரியர் அயன்புரம் R.பாபு, "திரை தீபம்" ஆசிரியர் மதிஒளி ராஜா, "நாற்காலி செய்தி" ஆசிரியர் ம.கார்த்திகேயன், "நீதியின் தீர்ப்பு" ஆசிரியர் திருமதி.ம.கிருஷ்ணவேணி, "நமது தமிழகம்" வெளியீட்டாளர் திருமதி.செந்தமிழ் செல்வி, ஆசிரியர் திரு.பாலாஜி, "பீப்பிள் பிளஸ்" தலைமை நிருபர் திரு.ம.அமிர்தலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை ஆற்றினார்கள்.



தமிழ் பத்திரிகை சங்கத்தின் மாநில, மாவட்ட நிர்வாகிகளும், ஏராளமான உறுப்பினர்களும் மாநாட்டில் கலந்து கொண்டு மாநாட்டிற்கு சிறப்பு சேர்த்தனர்கள்.

சங்கத்தின் மாநில மக்கள் தொடர்பு அலுவலர் திரு.வீ.சிவசங்கரன் உடன் அலுவலக மேலாளர் திரு.சி.ஆனந்த் இணைந்து விழாவிற்கான ஏற்பாடுகளை அருமையாக செய்திருந்தனர்.

மாநில துணைத்தலைவர் கி.பாலகிருஷ்ணன் நன்றியுரை நல்க, விழா இனிதே நிறைவடைந்தது. பத்திரிகையாளர்களின் நலமும், பாதுகாப்புமே பிரதானமாக பத்து தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது அனைத்து பெருமக்களாலும் வெகுவாக பாராட்டப்பட்டது.

- **வீ. சிவசங்கரன்**



# சட்டத்தின் பாதுகாவலரா? அரசாங்கத்தின் பாதுகாவலரா?

நெருக்கடிநிலை அமலில் இருந்தபோது, அடிப்படை உரிமைகளுக்காக நடந்த வழக்கில் 'சுதந்திரத்தின் வற்றாத கனிகளை ஏராளமானோருக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே, சிலருக்கான சுதந்திரம் தற்காலிகமாக மறுக்கப்படுகிறது' என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. நிர்வாகத் தலைமைக்கு 'மேலாதிக்க உரிமை' உண்டு என்பதை ஏற்கும் விதத்தில் தெரிவிக்கப்பட்ட இக்கருத்தை, 'ஆட்கொணர்வு வழக்கின் தீர்ப்பு' (ஹேபியஸ் கார்பஸ்) என்று குறிப்பிடுவர்.

'ஆபத்தான காலத்தில் அரசின் நன்மை கருதி, மக்களுடைய உரிமைகளை அந்த நன்மைக்கு உட்பட்டதாகக் கருத வேண்டும்' என்பது கொள்கை. எது ஆபத்தான காலம்? அதை அரசு முடிவுசெய்யும்; யாருடைய உரிமைகள் கட்டுப்படுத்தப்படும், எப்படி? அதை அரசு முடிவுசெய்யும்; சுதந்திர உரிமைகள் எப்போது திருப்பி அளிக்கப்படும்? அதை அரசு முடிவுசெய்யும்; அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட மாட்டாது என்ற அனுமானத்தின் பேரில் உச்ச நீதிமன்றம் (இந்த உரிமைகள் வழக்கில்) நடந்துகொள்ள வேண்டும் என்றது நீதித் துறை.

உச்ச நீதிமன்றம் எடுத்த நிலை எவ்வளவு தவறானது என்பது விரைவிலேயே தெரியவந்தது. நெருக்கடிநிலை விலக்கிக்கொள்ளப்பட்டவுடன், அரசு செய்த 'சட்டத்துக்குப் புறம்பான' பல செயல்கள் அம்பலமாயின. 'மிதமிஞ்சிய அதிகாரம், மிதமிஞ்சிய தவறுகளுக்கே வழிவகுக்கும்' என்பதை அவை நினைவூட்டின. நம்முடைய குடியரசு அரசமைப்புச் சட்டம் நிர்வாக முறைக்குப் பல கட்டுப்பாடுகளையும் வரம்புகளையும் கொண்டது. அரசு, தான் எடுக்கும் முடிவுகளுக்கும் செய்யும் செயல்களுக்கும் மக்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டது. மக்களுடைய அடிப்படை உரிமைகள் மீது அரசின் செயல்கள் குறுக்கிடும்போது, அரசு பதில் சொல்ல வேண்டும் என்று நீதிமன்றம் மூலம்தான் கேட்க முடியும்.

'ஆட்கொணர்வு வழக்கின் தீர்ப்பு' இந்தக் கொள்கைக்குத் துரோகம் விளைவித்தது. உச்ச நீதிமன்ற வரலாற்றின் 'இருண்ட காலம்' என்று அது அழைக்கப்பட்டது. இனி, இத்தகைய நிலை மீண்டும் வராமலிருக்க வெகு ஆழத்தில் இது புதைக்கப்பட வேண்டும் என்றது நீதித் துறை. அதற்குப் பதிலாக நோக்கத்துக்கும் செயலுக்கும் பொருத்தமான விகிதாச்சாரம் இருக்க வேண்டும் என்றது. மிகப் பெரிய லட்சியத்துக்காக மக்களுடைய அடிப்படை உரிமைகளைத் தற்காலிகமாக நிறுத்துவது அல்லது முடக்குவது அவசியம் என்றால், தன்னுடைய நோக்கத்துக்கும் செயலுக்கும் பொருத்தப்பாடு இருப்பதை அது நிரூபிக்க வேண்டும் என்றது. மிகவும் அவசியம் என்றாலும்கூட இத்தகைய உரிமை மறுப்புகள் மிகவும் குறைந்தபட்ச அளவிலேயே இருக்க வேண்டும் என்றது.

அரசின் நடவடிக்கைகள் அரசமைப்புச் சட்டப்படி செல்லத்தக்கதா என்பதை நீதிமன்றங்களில்தான் சோதித்துப்பார்க்க வேண்டும். ஆட்கொணர்வு வழக்கில் மாறுபட்ட தீர்ப்பு வழங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதி எச்.ஆர்.கன்னா, "ஆர்வக் கோளாறால் சிலர் நல்லது செய்வதாக நினைத்துக்கொண்டு 'சட்டப்படியான ஆட்சி' என்ற கொள்கைக்கு மாறாக மக்களுடைய அடிப்படை உரிமைகளில் செய்யும் ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆபத்தானவை" என்று எச்சரித்திருக்கிறார்.

இந்த ஆண்டு ஆகஸ்ட் 5 முதல் தகவல் தொடர்புகளை மேற்கொள்ள முடியாமல் முழுவதும் முடக்கப்பட்ட நிலைக்கு ஜம்மு-காஷ்மீர் மாநிலம் கொண்டுவரப்பட்டது. அரசியல் தலைவர்களும், எண்ணிக்கை தெரியாத அளவுக்குத் தனிநபர்களும் விசாரணையின்றி காவலில் வைக்கப்பட்டுள்ளனர். தகவல்தொடர்புகளை முடக்குவது அடிப்படை உரிமைகளான கருத்துரிமை, பேச்சுரிமையை முடக்குவதாகும். மாநிலத்துக்கு வெளியே வசிப்போர் தங்களுடைய குடும்பங்களுடன் தொடர்புகொள்ள முடியாமலும், வெளிச்சத்துக்கே வராத உரிமை மீறல் செயல்களை அம்பலப்படுத்த முடியாமலும் அரசால் திரைபோட்டு மறைக்க உதவுகின்றன. அத்துடன் அனைத்து வகை அடித்தளக் கட்டமைப்புகளையும் சேதப்படுத்துகின்றன.

சுகாதாரம், உணவு, போக்குவரத்து, மருத்துவம் ஆகிய அனைத்தையும் பெற முடியாமல் பாதிப்பை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. விசாரணையின்றி சிறையில் அடைப்பது தனிநபர் உரிமையை அப்பட்டமாக மீறுகிறது. இப்படி சமூக ஊடகங்களையும் இணையதளங்களையும் முடக்கிவைப்பதால் வன்முறையைத் தவிர்த்துவிடலாம் என்பதற்குச் சமீபத்தில் எந்த ஆதாரமும் இல்லை. மாறாக, இப்படி முடக்குவதால் வதந்திகள் பெருகி, மக்கள் அதனால் உணர்ச்சிவசப்பட்டு வன்செயல்கள் அதிகரித்ததற்கே சான்றுகள் அதிகம் இருக்கின்றன.

அரசமைப்புச் சட்டத் தேவைக்கேற்ப இந்த உரிமை முடக்க நடவடிக்கைகள் இருந்தனவா என்று பார்க்க வேண்டும். ஆனால், இதில் சில கேள்விகளுக்கு விடை அவசியம். ஜம்மு-காஷ்மீர் தொடர்பாக மத்திய அரசு எடுத்த நடவடிக்கை தொடர்பாக மக்கள் தங்களுக்குள் கடுமையாக விவாதித்தனர். செய்தித்தாள்களில் கட்டுரைகள், தலையங்கங்கள் எழுதப்பட்டன, ஊடகங்களில் விவாதித்தனர், பலரும் நேர்காணல்கள் மூலம் தங்களுடைய கருத்துகளைப் பதிவுசெய்தனர், ஐக்கிய நாடுகள் சபை வளாகத்தில்கூட இந்த விவகாரம் பேசப்பட்டது. ஆனால், ஒரு இடத்தில் மட்டும் இது தொடர்பான விவாதங்களே நடக்கவில்லை - அது இந்நாட்டின் நீதிமன்றங்கள்.



நெருக்கடிநிலை காலத்தில் நடந்ததைப் போல 'அரசின் நடவடிக்கை சரிதான்' என்று நீதிமன்றங்கள் இதுவரையில் கூறிவிடவில்லை. அதேசமயம், இந்நடவடிக்கை குறித்து கருத்து தெரிவிப்பதையே தள்ளிப்போட்டன, தவிர்க்கப் பார்த்தன, தப்பித்தன, பதுங்கின. ஷா பெசல் என்ற அரசியல் தலைவர் தன்னைக் கைதுசெய்ததை எதிர்த்து தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை டெல்லி உயர் நீதிமன்றம் இருமுறை ஒத்திவைத்தது (ஒருமுறை அரசுத் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்துக்கு வரவில்லை).

உச்ச நீதிமன்றத்தில் இதைவிட மெச்சிக் கொள்ளும்படி எதுவும் நடந்துவிடவில்லை. இணையதளம் உள்ளிட்ட தகவல்தொடர்பு முடக்கம் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டன. முதல் முறை, 'அரசுக்குச் சிறிது அவகாசம் அளிக்க வேண்டும்' என்ற கருத்துரையோடு ஒத்திவைக்கப் பட்டது. நெருக்கடிநிலைக் காலத்தில் ஆட்கொணர்வு மனு மீதான கருத்தின் எதிரொலிபோலவே இது இருந்தது. செப்டம்பர் 16-ல் இந்த மனு மீது விசாரணை நடக்கும்போது, உரிமைகள் முடக்கப் பட்டு 40 நாட்களாகியிருக்கும். பேச்சுரிமை, கருத்துரிமை மீதான தாக்குதல்களைப் பற்றி மௌனம் சாதித்துவிட்டு, ஆட்கொணர்வு மனுவுக்கான உரிமை தொடர்பான மனுவை முதலில் விசாரணைக்கு ஏற்றது. உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு தான் செய்தது நியாயம்தான் என்று நிரூபிக்குமாறு அரசைக் கேட்பதற்குப் பதிலாக, மனுதாரர்கள் காஷ்மீர் செல்லவும் அங்கே தடுப்புக் காவலில் இருந்த சிலரைச் சந்திக்கவும் அனுமதி தந்தது.

நம்முடைய அரசமைப்புச் சட்ட முறைப்படி, நாடு முழுவதும் செல்வதற்கு நீதிமன்றத்திடம் அனுமதிச் சான்றிதழ் பெற வேண்டிய அவசியமே இல்லை. இப்படி அனுமதி தந்ததன் மூலம், கைது தொடர்பாகத் தன்னுடைய கருத்து என்ன என்பதைத் தெரிவிக்க மறுத்துவிட்டது நீதிமன்றம். தனிநபர்களைப் பொறுத்தவரை தற்காலிகமான சமரச ஏற்பாட்டை அது நாடியது. தகவல்தொடர்பு முடக்கப்பட்டது, விசாரணையின்றி காவலில் வைக்கப்பட்டது குறித்து அரசியல் சட்டப்படி தான் செய்ய வேண்டிய கடமையை அது செய்யவில்லை. நீதித் துறையின் இந்த நழுவலால் மாநிலத்தில் அதே நிலைமை நீடிக்கிறது.

தன் முன்னுள்ள வழக்கு தொடர்பாக ஆணை எதையும் பிறப்பிக்காததன் மூலம் மக்களுடைய அடிப்படை உரிமைகள் மீதான ஆக்கிரமிப்பை நீதிமன்றம் அனுமதித்துள்ளது. தன்னுடைய செயலை விளக்கவேண்டிய அரசாங்கத்தை அந்தப் பொறுப்பி லிருந்து விலக்கிவிட்டது. பதில் சொல்லக் கடமைப் பட்ட அரசு பதில் சொல்லாமல் தப்ப முடிந்தி ருக்கிறது. இது நீதித் துறையை விட நிர்வாகத் துறைதான் மேலாதிக்கம் மிகுந்தது என்பதை ரகசியமாக வலியுறுத்தும் செயலாகும். மக்களுடைய உரிமைகளுக்கு சார்பாக நிற்க வேண்டிய நீதித் துறை, களத்தை விட்டு விலகிவிட்டது, அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய தன் பணியைச் செய்யாமல் நகர்ந்துவிட்டது.

**- S. மோகன்**

முனைவர் ஆ.மவுரியன்



தொடர் 23

வீரத்தமிழச்சிகளின் வரலாறு



இந்திய விடுதலைப் போராட்ட வீராங்கனை

# கே.பி.ஜானகி அம்மாள்

**தமிழ்நாட்டின் 'அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின்' முதல் தலைவர்**

கே.பி.ஜானகி அம்மாள் இந்திய விடுதலைப்போராட்டவீராங்கனை, மேடை நாடகக் கலைஞர், விவசாய சங்கத்தின் தலைவர்களில் ஒருவர். ஜனநாயக மாதர் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவர்.

ப.ஜீவானந்தம் மற்றும் பி.ராமமூர்த்தி ஆகியோரை வத்தலக்குண்டுவில் சந்தித் தார். கம்யூனிசக் கருத்துக்களால் ஈர்க்கப் பட்டு 1940 ஆம் ஆண்டு ஒன்றுபட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். 1967 ஆம் ஆண்டில் பழைய மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.


முதல் தலைவர் ஆவார்.ஜானகி அம்மாள் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் தமிழ்நாட்டின் முதல் தலைவர் ஆவார்.

*மிகச் சாதாரணப் குடும்பப் பின்னணி கொண்டவர் ஜானகியம்மாள். டிசம்பர்-9, 1917-ம் ஆண்டு மதுரையைச் சேர்ந்த பத்மநாபன் - லட்சுமி தம்பதியின் மகளாகப் பிறந்தார். தன் எட்டாவது வயதில் தாயை இழந்தார். அதன்பின் தன் பாட்டியிடம் வளர்ந்த ஜானகி, அரசாங்கப் பெண்கள் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை படித்தார். சிறுவயது முதலே சிறந்த குரல்வளம் கொண்ட ஜானகிக்கு இசைப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார் அவரின் பாட்டி. தன் 12-ம் வயதில் 25 ரூபாய் சம்பளத்துக்கு மதுரை பழனியாபிள்ளை பாய்ஸ் கம்பெனி என்ற நாடகக் கம்பெனியில் பணியமர்த்தப் பட்டார் சிறுமி ஜானகி. வள்ளித் திருமணம், நல்லதங்காள், பவளக்கொடி, அரிச்சந்திரா, மனோகரா போன்ற நாடகங் களில் கதாநாயகியாக நடிக்கும் அளவுக்கு சில ஆண்டுகளில் தன் குரல் வளத்தால் உயர்ந்தார். இலங்கை சென்று, அங்கு ஆறு மாதங்கள் தங்கி நாடகங்களில் நடித்தார்.*

*ஜானகியின் வாழ்க்கையில் அடுத்து வந்த திருப்புமுனை, நாடக கம்பெனியில் ஆர்மோனியம் வாசித்து வந்த எஸ்.குருசாமியுடனான சந்திப்பு. தீவிர காங்கிரஸ் இயக்கப் பற்றுகொண்ட குருசாமி, ஜானகியையும் விடுதலை வேட்கைகொள்ளச் செய்தார். இருவரும் இணைந்து விவாதித்தது,*

ஜானகியின் அரசியல் ஆர்வத்தை வளர்ந்தது. கூடவே காதலும் வந்தது. ஏற்கெனவே திருமணமான குருசாமிக்கு பாஞ் சாலியம்மாள் என்ற மனைவியும், மூன்று பெண் குழந்தைகளும் இருந்தனர். காதலுக்கு எதுவுமே தடையில்லையே? 1934-ம் ஆண்டு குருசாமியும் ஜானகியும் திருமணம் செய்துகொண்டனர்.

ஒரு நாடகத்தில் நடிக்க 300 ரூபாய் வாங்கிக்கொண்டிருந்த ஜானகி (அப்போது ஒரு பவுன் தங்கத்தின் விலை 10 ரூபாய்), நாடகங்களில் நடிப்பதைக் குறைத்துக் கொண்டார். சிறப்பு நாடகங்களில் மட்டுமே அதன்பின் நடித்தார். அப்போது ஜானகிக்குச் சொந்தமாக மதுரை மேல மாசி வீதியில் இரண்டு பெரிய வீடுகள், 200 பவுன் தங்க நகைகள், விலை உயர்ந்த நூற்றுக்கணக்கான பட்டுச் சேலைகள் இருந்தன.



விடுதலைப் போராட்டத்தில் பெரும் ஈடுபாடுகொண்ட ஜானகி, எந்தக் கட்டணமும் இன்றி காங்கிரஸ் கட்சியின் மேடைகளில் தொடர்ச்சியாக விடுதலை வேட்கைப் பாடல்களைப் பாடத் தொடங்கினார். மக்கள் கூட்டம் கூட்டமாக ஜானகியின் பாடல்களைக் கேட்க ஆர்வத்துடன் வந்தனர். பாரதியார் எழுதிய பாடல்களைத் தொடர்ந்து பாடிவந்தாலும், காங்கிரஸாரின் தவறுகளைச் சுட்டிக்காட்டி உடுமலை நாராயணகவி இயற்றிய 'காந்தி சொல்லை தட்டாதீங்க காங்கிரஸ்காரர்களே' போன்ற பாடல்களையும் பாடி வந்தார். சாதி எதிர்ப்பு, பெண் விடுதலை, பெண் சமத்துவம் போன்றவற்றை காங்கிரஸ் கூட்டங்களில் வலியுறுத்தி வந்தார் ஜானகி.

1934-ம் ஆண்டு காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியை ஜெயப்பிரகாஷ் நாராயண் உருவாக்கியபோது, குருசாமி, பசும்பொன் முத்துராமலிங்கம், ஜானகி ஆகியோர் அதில் இணைந்தனர். துரதிர்ஷ்டவசமாக இந்தக் காலகட்டத்தில் குருசாமி - ஜானகி தம்பதிக்கு ஆண் குழந்தை ஒன்று இறந்தே பிறந்தது. மனம் ஒடிந்துபோனார்கள் இருவரும்.

காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர் ஜீவாவின் அறிவுறுத்தல்படி, தென்னாற்காடு மாவட்டம் முழுக்க அவருடன் சுற்றுப்பயணம் மேற்கொண்டவர், மேடைகளில் பேசத் தொடங்கினார். ஜீவாவின் ஊக்கமும், அவர் தயாரித்துத் தந்த குறிப்புகளின் துணையும், ஜானகியின் பேச்சு பொதுமக்களை சென்றடைய பெரும் தூண்டுதலாக அமைந்தது. சோஷலிஸ கோட்பாடுகளை முழுக்க உள்வாங்கிக்கொண்டார் ஜானகி.

இரண்டாம் உலகப்போர் தொடங்கிய 1939-ம் ஆண்டு, செப்டம்பர் 4-ம் தேதி அன்று பசும்பொன் முத்துராமலிங்கத்தின் அழைப்பை ஏற்று மதுரை வந்தார் சுபாஷ் சந்திர போஸ். காந்தி நிறுத்திய வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்டு அப்போது ஜெயித்திருந்த போஸை வரவேற்க காங்கிரஸார் தயக்கம் காட்ட, எந்த அச்சமும் இன்றி அன்றைய மதுரை மாவட்டத் தலைவர் மற்றும் செயலாளராக இருந்த குருசாமி - ஜானகி தம்பதி, முத்துராமலிங்கத்துடன் சேர்ந்து விமான நிலையம் சென்று வரவேற்றனர்.

**- தொடரும்**

# அணைகள் அதிகம் இருந்தும்

# நீர் பற்றாக்குறை ஆவது ஏன்?

தண்ணீர்ப் பற்றாக்குறை மாநிலத்தை ஆளும் அரசு தண்ணீர் வந்தடையும் சூழலிலும் சுதாரித்து சேமித்து நிர்வகிக்காமல், கையாலாகாத்தனமாக நின்றுகொண்டிருப்பதைப் பார்ப்பது. ஆனால், இதற்கான தீர்வு என்று பேசும்போது பொதுப்புத்தியிலிருந்து பேசுபவர்கள் இரு விஷயங்களை இணைத்துப் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். ஒன்று, 'கொள்ளிடத்தில் திறந்து விடப்படுவதால் அந்தத் தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கவிடப்படுகிறது' என்று சொல்வது. மற்றொன்று, 'இந்நிலையை மாற்ற புதிய அணைகள் வேண்டும்' என்று சொல்வது.

மேகேதாட்டுவில் புதிய அணை கட்ட முயன்றுவரும் கர்நாடக மாநிலம், காவிரி உபரி நீர் கடலில் கலப்பதை ஒரு காரணமாகக் காட்டுகிறது. இதற்கு மாற்றாக, தமிழ்நாட்டுக்கு உட்பட்ட ராசிமணலில் அணை கட்ட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. இப்படியான முயற்சிகள் தேவைப்படும் இடங்களில் முன்னெடுக்கப்படுவதில் தவறில்லை. ஆனால், பொதுவான ஒரு உண்மை என்னவென்றால், போதுமான அளவுக்குத் தமிழ்நாட்டில் அணைகள் இருக்கின்றன என்பதும், பண்டைத் தமிழர் நீர் மேலாண்மையின் மிக முக்கியமான அம்சம், நீர்நிலைகளையே அவர்கள் உயிருள்ள அணைகளாகக் கட்டமைத்திருந்தார்கள் என்பதும். இதுகுறித்து இன்றைய தலைமுறை ஆட்சியாளர்களுக்குப் போதிய விழிப்புணர்வு இல்லாததன் விளைவாகவே இத்தகைய பேச்சுகள் தொடர்கின்றன என்பதும்தான். நாம் இன்றைய கட்டமைப்பிலிருந்து இதைப் புரிந்துகொள்ள முயல்வோம். மேட்டூருக்கு வரும் தண்ணீர் அந்த அணையை நிரப்பியதும் உபரி நீர் முக்கொம்பு, கல்லணை, அணைக்கரை வழியே கொள்ளிடத்தில் திறந்துவிடப்படுவது எந்த வகையில் வியூக முக்கியத்துவம் வாய்ந்தது? கொள்ளிடத்தில் திறந்துவிடப்படும் தண்ணீரைச் சேமித்து, நிர்வகிக்கும் நீர்க் கட்டமைப்புகளை நாம் எப்படியெல்லாம் வீணடிக்கிறோம்? பார்ப்போம்!

மேட்டூர் அணையில் அதன் முழுக் கொள்ளளவை எட்டிய பிறகு, அங்கிருந்து காவிரியில் திறக்கப்படும் உபரி நீர் மேலணை எனப்படும் முக்கொம்பிலுள்ள நீர்த்தேக்கத்தை வந்தடைகிறது. அங்கு காவிரி, கொள்ளிடம் என்று காவிரியாறு இரண்டாகப் பிரிகிறது. காவிரி மாவட்டங்களுக்குப் பாசனத்துக்குத் தேவையான அளவுக்கு காவிரியிலும், எஞ்சிய நீர் கொள்ளிடத்திலும் அனுப்பப்படுகிறது. இந்தத் தண்ணீர் அடுத்த நிலையில், கல்லணையிலும், அதற்கு அடுத்த நிலையில், கீழணை எனப்படும் அணைக்கரையிலும் மேலும் பல கிளைகளுக்குப் பிரித்து அனுப்பப்படுகிறது. இதற்குப் பின்னரே உபரி நீர் கடலை அடைகிறது.

காவிரிப் படுகையில் பாசனம் என்பது காவிரியிலிருந்து பிரியும் அதன் துணை ஆறுகள், வாய்க்கால்கள் மூலமாகவே நடக்கிறது. இதனால், காவிரியில் தண்ணீரைச் சேமித்து வைப்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. விளைவாகவே, கொள்ளிடத்தை ஒட்டி ஏராளமான ஏரிகள், அவற்றை இணைக்கும் வாய்க்கால்கள் உருவாக்கப்பட்டன. அவற்றை நாம் முறையாக நிர்வகிப்பது இல்லை.

**ஐயன்பெருவளை வாய்க்கால்**



முக்கொம்பிலிருந்தே நம் கணக்கைத் தொடங்குவோம். முக்கொம்பில் காவிரியும் கொள்ளிடமும் பிரியும் இடத்தில் இடதுபுறம் பிரிவது ஐயன்பெருவளை வாய்க்கால். இதுவே புள்ளம்பாடி வாய்க்கால் என்று அழைக்கப்படுகிறது. சுமார் 56 கிமீ பயணித்து, நான்கு பெரிய ஏரிகளையும் 22 சிறு ஏரிகளையும் நிரப்ப வல்லது இது. இந்த புள்ளம்பாடி வாய்க்காலைத் தூர்வாரி, கரைகளை முறையாகப் பராமரித்திருந்தால் மேற்கண்ட அனைத்து ஏரிகளிலும் நாம் தண்ணீர் நிரப்பியிருக்கலாம். திருச்சி மாவட்டம், நத்தம் கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றிலிருந்து பிரியும் நந்தியாறு மூலம் திருச்சி

மாவட்டத்துக்கு உட்பட்ட பெருவளநல்லூர் ஏரி, சங்கேந்தி ஏரி, கோமக்குடி ஏரி, ஆலங்குடி மகாஜன ஏரிக்குத் தண்ணீர் வருகிறது. இவை எல்லாவற்றையும்விட முக்கியமானது அரியலூர் மாவட்டத்தில் கண்டராதித்தம் கிராமத்தில் உள்ள செம்பியன்மாதேவி ஏரி.

பிற்காலச் சோழர்களில் ராஜராஜ சோழனின் பாட்டனாரான கண்டராதித்த சோழன் தன் மனைவி செம்பியன்மாதேவி பெயரில் வெட்டிய ஏரி இது. இதற்கான நீர் கொள்ளிடம் ஆற்றில் அன்பில் கிராமம் அருகே பிரியும் கால்வாய் வழியாகவும், புள்ளம்பாடி கால்வாய் வழியாகவும் கிடைக்க வேண்டியது. ஆனால், இன்று அதன் நிலை என்ன?

சுமார் 1,500 ஏக்கர் பரப்பளவில் விரிந்து கிடக்கும் ஏரியின் ஒரு பகுதி ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. எஞ்சிய இடம் பல ஆண்டுகளாகத் தூர்வாரப்படாததால் புதர் மண்டிக் கிடக்கிறது. இந்த ஏரிக்குத் தண்ணீரைக் கொண்டுவர வேண்டிய இரு வாய்க்கால்களைத் தூர்வாரி, கரை கட்டிப் பராமரித்திருந்தால், ஒரு தாலுகாவுக்கு ஒரு பருவ நெல் சாகுபடிக்குத் தண்ணீர் தரலாம். கண்டராதித்தம் ஏரி இந்த ஆண்டு மட்டுமல்ல; பல ஆண்டுகளாகக் காய்ந்து கிடக்கிறது.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள சுத்தமல்லி ஏரியின் நிலையும் இதுதான். இந்த மாவட்டத்தில் உள்ள சோழகங்கம் எனப்படும் பொன்னேரி ஆயிரம் ஆண்டுகள் பழமையானது. ராஜேந்திர சோழன் கங்கை வரை படையெடுத்து வென்றதன் நினைவாக கங்கைகொண்ட சோழபுரத்தை அமைத்தபோது, அதன் அருகே உருவாக்கிய ஏரி இது.

கொள்ளிடம் ஆற்றிலிருந்து இந்த ஏரிக்குத் தண்ணீர் வரக்கூடிய கால்வாய் இருக்கிறது. மிக முக்கியமான இந்தக் கால்வாய், பல ஆண்டுகளாக தமிழக ஆட்சியாளர்களின் கவனத்தைப் பெறவே இல்லை. விளைவு, கொள்ளிடத்தில் உபரி நீர் கடலுக்குச் சென்றுகொண்டிருக்க, அதிலிருந்து 10 கிமீ தொலைவில் உள்ள பொன்னேரியின் பெரும் பகுதி காய்ந்து கிடக்கிறது. பல ஆயிரம் ஏக்கர் நிலத்துக்குப் பாசனத் தண்ணீர் தர வேண்டிய ஏரி கால்நடைகளின் மேய்ச்சல் காடாகக் காட்சியளிக்கிறது. பொன்னேரி நிரம்பினால் அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஜெயங்கொண்டம் வட்டம் செழித்திருக்கும்.

இவை எல்லாவற்றையும்விடப் பெரியது, முக்கியமானது வீராணம் ஏரி. கொள்ளிடம் ஆற்றில் கீழணை எனப்படும் அணைக்கரையிலிருந்து வடவாறு வழியே வீராணம் ஏரிக்கும், அதன் இருபுறங்களிலும் உள்ள ராசன் வாய்க்கால்களுக்கும் தண்ணீர் வருகிறது. கடல் போன்று பரந்து கிடக்கும் வீராணம் ஏரியின் ஒரு பகுதி மட்டுமே இரண்டு ஆண்டுகளுக்கு முன் தூர்வாரப்பட்டது.

வீராணம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டுவரும் வடவாற்றின் மூலம் நிரம்பும் மற்றொரு ஏரி நாரை ஏரி. காட்டுமன்னார்கோவிலுக்கு மேற்கே உள்ள இந்த ஏரி என் வாழ்நாளில் தூர்வாரப்பட்டு நான் கண்டதில்லை. வீராணம் ஏரி நிரம்பிய பிறகு, சேத்தியாதோப்பு கால்வாய் வழியாக நிரம்பக்கூடியது பெருமாள் ஏரி.



கடலூர் மாவட்டத்தில் குள்ளஞ்சாவடி அருகேயுள்ள ஏரி தமிழ்நாட்டின் மிகப் பெரிய ஏரிகளில் ஒன்று. ஒரு லட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி தரக்கூடியது. ஏரியின் மூன்றில் ஒரு பகுதி ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. எஞ்சிய பரப்பும் தூர்வாரப்படாமல் உள்ளது. வீராணம் ஏரியை இதனுடன் இணைக்கும் கால்வாய் ஆகாயத்தாமரையால் மூடிக்கிடக்கிறது.

கொள்ளிடம் என்பது பொங்கிவரும் காவிரி நீரை, அது வெள்ளமாகி ஊரை அடித்துச் செல்வதிலிருந்து காக்கும் அரண் மட்டும் அல்ல; வறட்சிக் காலத்தில் நீரின்றித் தவிக்கக் கூடாது என்பதற்காக உருவாக்கப்பட்ட உயிருள்ள நீர்த்தேக்கங்களுக்கு உயிர் நீரைப் பகிர்ந்து தருவதற்கான கட்டமைப்பும்தான். ஆனால், கொள்ளிடத்தை இன்றைய நாட்களில் உபரி நீரை வெளியேற்றுவதற்கான பாதையாக மட்டுமே நாம் பயன்படுத்திவருகிறோம். கொள்ளிடத்திலிருந்து உபரி நீர் ஏன் நேராகக் கடலுக்குச் செல்கிறது என்றால், அங்கிருந்து தண்ணீர் செல்ல வேண்டிய ஏரிகளும் கால்வாய்களும் அவற்றுக்கு தண்ணீரைக் கொண்டுசேர்க்கும் நரம்புகளான வாய்க்கால்களும் தூர்ந்துகிடக்கின்றன என்பதால்தான். பழிக்கு உரியது கொள்ளிடம் அல்ல; அது அள்ளித்தரும் இடம்!

**– S. ராம்குமார்**

# சிவ கட்டளை

மந்திரம் தேடாதே
ஒரு தந்திரமும் நாடாதே
உன்னைத் தேடு
என்னை நாடுவாய்.

ஊர் ஊராக சுற்றாதே
உன் உடலை சுற்று.

ஊர் உனக்கு மகுடம் சூட்டி
உத்தமன் என பட்டம் தந்தாலும்!
உடல் உன்னை கை விட்டால்
உன் பட்டமும் உன் பதவியும்
பிடி சாம்பலாகிவிடும்.

புறத்தில் உன் குடும்பத்தை நேசித்தாய்
அது உன் குடும்பம்
என கண்டும் கொண்டாய்.

ஓடி ஓடி உழைத்தாய் உன் குடும்பத்திற்கு காவல்
தெய்வமாக நின்றாய்.
ஆனால் உனக்கு காவல் தெய்வமாக உன்
உயிருக்கு
காக்கும் கடவுளாக,
இருப்பது உன் உடலே!

அக குடும்பத்தை மறந்து விடாதே.
உன் அக குடும்பம் உன் உடலே!
உன் அக குடும்பம்
சரியில்லை என்றால்
சூரிய குடும்பத்தில்
நீ இருக்க இயலுவதில்லை.

உன் உள் குடும்பம் உன் உடலே!
அதை மறந்தால் உன்
வெளி குடும்பம் கதறினாலும்
உன்னை காக்கவும் யாரால் முடியும்.

மற்ற உயிர்களுக்கு
ஒருவன் செய்யும் பாவத்திற்கு
விமோசனம் உண்டு.

ஒருவன் அவன் உடலுக்கே செய்யும் பாவத்திற்கு
விமோசனம் இல்லை.
காரணம் அந்த உடல்
அவன் உயிருக்காகவே
சிறப்புமிக்க வரமாக கொடுக்கப்பட்டதால்.
உடலுக்கு ஒருவன் செய்யும்
தொண்டே சிவ பூஜை

உடலுக்கு உள் சென்று
உனக்காக உழைக்கும் உறுப்புகளை வணங்குவதே
ஆலயம் சென்று வணங்குவதை விட
உயர்வானது.



உடல் அனுமதித்தால் தான்
ஒருவன் சித்தனும் ஆக முடியும்.

ஒருவன் எப்படி பட்டவன் ஆக வேண்டும் என்று
தீர்மானிப்பது
அவனின் எண்ணங்களே.

ஆனால் அந்த எண்ணங்களை
தீர்மானிப்பது
சிவ சாட்சியான உடலே!

ஒருவன் எதுவாக ஆக விரும்புகிறானோ
அதை தீர்மாணிப்பதும் உடலே!

ஒருவன் உண்ணும் உணவும்
பேணி காக்கும் உடலும்
அழைத்துசெல்லும்
அதன் அதன் தன்மைக்கு ஏற்ப.
ஒருவன் அவன் உள் குடும்பமான உடலை
கவனித்தால்.
அந்த உள் குடும்பமே
உன் வெளி குடும்பத்தை காக்கும்.

பிறந்த ஒவ்வொருவருக்கும் அவரவர் குலத்தின்
சிவ குலதெய்வம்
அவரின் உடலே!

உலகின் அனைத்து ரகசியமும் உன் உடலுக்கு
உள்ளே.
அதை தேடு இதுவே சிவ கட்டளை.

வாழ்க வையகம்! வாழ்க வையகம்!
வாழ்க வளமுடன்! சந்தோஷம்!
எல்லா உயிர்களும்

- கவிஞர் நிவேதிதா

# இந்திய வரலாறு தமிழகத்தில் இருந்து துவங்கப்பட வேண்டும்

## மு.க.ஸ்டாலின்



சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடிக்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வந்தார். அங்கு நடக்கும் ஐந்தாம் கட்ட அகழாய்வு பணிகள், அகழாய்வில் கிடைத்த தொல்லியல் பொருட்களை பார்வையிட்டார். அகழாய்வு பணிகள் மற்றும் கிடைத்த பொருட்கள் குறித்து அவருக்கு தமிழக தொல்லியல் துறை துணை இயக்குநர் சிவானந்தம், காப்பாட்சியர் ஆசைத்தம்பி ஆகியோர் விளக்கம் அளித்தனர். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: தமிழர்களுடைய வரலாற்று தொன்மையை பறைசாற்றிக் கொண்டிருக்கும் கீழடியில் நிற்பதை பெருமையாக கருதுகிறேன். இது ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் கிடைத்திருக்கும் பெருமையாக கீழடி விளங்கி கொண்டிருக்கிறது. இந்த ஆய்வுப்பணியில் ஈடுபட்டிருக்கும் அரசு நிர்வாகம், மத்திய, மாநில தொல்லியல் ஆய்வாளர்களுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முயற்சி தொடர வேண்டும். இனிமேல்தான் அதிக கவனம் செலுத்தி மத்திய, மாநில அரசுகள் முழுமையாக அகழாய்வு பணிகளில் ஈடுபட வேண்டும். கீழடி அகழாய்வு கி.மு. **6**ம் நூற்றாண்டிலேயே தமிழர்களுடைய நாகரீகம் எப்படியெல்லாம் இருந்தது என்பதை ஒடுகள் மூலமாகவும், அதேபோல தங்கம், இரும்பு ஓடுகளில் உள்ள எழுத்துக்கள் எல்லாம் மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றன. உ.பி.யில் சனோலி என்ற தொல்லியல் பகுதி பாதுகாக்கப்பட்ட இடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. குஜராத்தில் வாட்டு என்ற பகுதியும் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு அருங்காட்சியகம் அமைக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. அதைபோல கீழடியை பாதுகாக்கப்பட்ட மண்டலமாக அறிவித்து உலகத்தரமான அருங்காட்சியகம் அமைக்கப்பட வேண்டும். தூத்துக்குடி மாவட்டம்,

இந்திய வரலாறு என்பது தெற்கில் இருந்துதான் தொடங்கப்பட வேண்டும் என பல அறிஞர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இப்பொழுது தமிழகத்தில் இருந்துதான் இந்திய வரலாறு துவங்கப்பட வேண்டும் என்பதை கீழடி உறுதி செய்திருக்கிறது. நமது பண்பாடு, கலாச்சாரம் காப்பாற்றப்பட வேண்டும். அதற்கு மத்திய அரசு முயற்சி எடுக்க வேண்டும். அதற்கு மாநில அரசு, மத்திய அரசுக்கு அழுத்தம் தரவேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். மு.க.ஸ்டாலினுடன், முன்னாள் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, பெரியகருப்பன், சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, மதுரை எம்பி வெங்கடேசன் சென்றனர்.

**- S. சுப்ரமணியன்**

கிராமப்புற மாணவர்கள் பள்ளிக்கு வருவதே பெரும்பாலும் கஷ்டம் தான். அரசு பள்ளிகளில் விவசாயத்தை நம்பி இருக்க கூடிய குழந்தைகள், ஏழை குழந்தைகள் தான் பெரும்பாலும் படிக்கின்றனர். அந்த மாணவர்கள் பயமின்றி பள்ளி வர வேண்டுமென்றால் 5ம்வகுப்பு, 8ம்வகுப்பு பொதுத்தேர்வு இருக்ககூடாது. அரசு தரமான கல்வியை வழங்குகிறது.



# தேர்வு என்பது மாணவனை புத்திசாலியாக்கி விடாது

## அர்ஜூனன், நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்

அந்த தரமான கல்வி வழங்கும் இந்த நேரத்தில் அவர்களுக்கு காலாண்டு, அரையாண்டு, மாதாந்திர தேர்வு நடத்தப் பட்டுதான் வருகிறது. இது, அந்த மாணவர்களின் திறமையை நிருபித்து காட்டுகிறது. பொதுத்தேர்வு என்றால் கூட எப்பேர்பட்ட ஆளாக இருந்தாலும் ஒரு நடுக்கம் வரத்தான் செய்யும். அந்த மாதிரி குழந்தைகளுக்கு உளவியல் ரீதியாக பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. இதை கருத்தில் கொண்டு 5ம் வகுப்பு, 8ம் வகுப்பு பொதுத்தேர்வு நடத்தக் கூடாது. அரசு பள்ளிகளில் நமது மாணவர்கள் தமிழ்வழி கல்வியில் தான் பெரும்பாலும் படிக்கின்றனர்.

அந்த குழந்தைகளுக்கு கல்வியை பலப் படுத்தவும், தரப்படுத்த வேண்டும் என்பதே அரசின் நோக்கம், ஆசிரியரின் நோக்கம். அடித்தட்டு மக்களும் நன்றாக படித்து மேலே வர வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் நாங்கள் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கிறோம். இந்த நிலையில் 5ம் வகுப்பு, 8ம் வகுப்புக்கு பொதுத்தேர்வு நடத்துவதால், அது மாணவர்களின் இடைநிற்றலுக்கு வழி வகுக்கும். தரமான மாணவர்களை உருவாக்குவதற்கு ஆசிரியர்களுக்கு பயிற்சி தரலாம். அந்த மாணவர்களை மேம்படுத்தக்கூடிய வகையில் ஆசிரியர்கள் மேம்படுத்தலாம். அதை செய்யாமல் ஒரு தேர்வு என்பது ஒருவனை புத்திசாலியாகவோ, முட்டாளாக்கவோ ஆக்கி விடாது. தேர்வு நேரத்தில் ஒரு மாணவனின் உடல் நிலை சரியில்லாமல் போகலாம். குடும்ப பிரச்னை காரணமாக கூட ஒரு மாணவன் படிக்காமல் போகலாம். இந்த மாதிரியான சூழ்நிலையில் குறைந்த மதிப்பெண் பெற்ற அந்த மாணவன் பெறுவதை மதிப்பீடு செய்வது சரியான செயலாக இருக்காது என்று நான் பார்க்கிறேன். வயல்களில் வேலை செய்யும் குழந்தைகள், ஆட்டோ ஓட்டும் குழந்தைகள், கூலித் தொழிலாளர் குழந்தைகள் படிக்க வேண்டும். இந்த மாதிரி பொதுத்தேர்வு வரும் போது



அவர்களுக்கு கல்வி கேள்விக்குறியாகி விடும். இதன் நோக்கம் எப்படியாக இருந்தாலும் சரி. கிராமப்புற மாணவர் களை கடுமையாக பாதிக்கும். இதனால், இடைநிற்றல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

சாதாரண தேர்வு என்றால் மாணவர்கள் பயப்பட மாட்டார்கள். பொதுத்தேர்வு என்றால் ஒரு பயம் இருக்கும். நமது கல்வி அமைச்சர் பின்லாந்து சென்று வந்தார். அங்கு, எல்கேஜி, யுகேஜி கிடையாது. அங்கு ஒரு மாணவன் புரிந்து கொள்கிற வயதில் தான் பள்ளிக்கு அனுப்புகின்றனர். எப்போது ஒரு மாணவன் புரிந்து படிக்கிறானோ அப்போது தான் அவன் சிறந்தவனாக உருவாகிறான். மனப்பாடம் வைத்து ஒரு பரீட்சைக்கு மாணவன் படிக்க கூடாது. அந்த மாணவன் பார்த்தது, உணர்ந்ததில் இருந்து கேள்வி கேட்க வேண்டும். ஒவ்வொரு மாணவனுக்கு ஒவ்வொரு திறமை உள்ளது. அந்த மாணவனின் திறமையை வெளிக் கொண்டு வர வேண்டும். அதை விடுத்து அந்த மாணவனுக்கு பொதுத்தேர்வு என்ற பெயரில் பயமுறுத்தி மன உளைச்சலை ஏற்படுத்த கூடாது.

இதை அரசு நன்கு புரிந்து கொண்டு செயல்பட்டால் மாணவ சந்ததிகளின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும். இடை நிற்றல் என்ற நிலை இருக்கவே இருக்காது. நமது கல்வி அமைச்சர் பின்லாந்து சென்று வந்தார். அங்கு, எல்கேஜி, யுகேஜி கிடையாது. அங்கு ஒரு மாணவன் புரிந்து கொள்கிற வயதில் தான் பள்ளிக்கு அனுப்புகின்றனர்.

- ஆசிரியர்


## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

# மக்கள் விசாரணை

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : news@makkalvisaranai.com
Cell : 93821 33334, 93821 44446

# பொழைக்கத் தெரிந்தவன்!

ஒரு பக்க சிறுகதை

“மீடியா துறைக்கு படிச்சிட்டும் மீடியா” பத்திரிகை செயல்ப்பாடுகள் மீது வெறுப்படைந்த ரொம்ப நாள் வேலை கிடைக்காத ஒருத்தர் தெருக்குத் தெரு கிளினிக்கும், நர்சிங் ஹோம்களும், ஆஸ்பிட்டல்களும் புதிது புதிதாக தொடங்கப்படுவதை பார்த்தார்!

“மீடியா, பத்திரிகை என அலைந்து நேரத்தையும், திறமையையும் வீணாக்குவதை விட பேசாம நாமலும் ஒரு டாக்டர் ஆகிடலாம்“ என நினைத்தார். உடனடியாக பல வெளிநாட்டு பல்கலைக் கழகங்களுடன் தொடர்புடைய புரோக்கர் ஒருவரைப் பிடித்தார். காசு கொடுத்து கவுரவ டாக்டர் (முனைவர்) பட்டம் ஒன்றை வாங்கினார். தனது பெயருக்கு முன்னாள் டாக்டர் (Dr.) என எழுத தொடங்கினார். சில நாட்களுக்கு பின்னர் டாக்டர் (Dr.) என்ற பெயரில் கிளினிக் ஒன்றைத் திறந்தார். வாசலில் ஒரு போர்டு எழுதினார்.

“எந்த வியாதியாக இருந்தாலும் 500 ரூபாயில் குணப்படுத்தப்படும். உங்கள் வியாதி குணமாகவில்லையெனில் 1000 ரூபாயாக திருப்பி தரப்படும்“ இதைக் கவனித்த உண்மையிலேயே மருத்துவம் படித்தும் சரியான வேலையில்லா மருத்துவர் ஒருவர் இந்த போலி “மீடியா டாக்டரிடம்“ இருந்து ஆயிரம் ரூபாயை பறிக்க உள்ளே சென்றார்.

“டாக்டர், என் நாக்குல எந்த சுவையும் உணர முடில”

“நர்ஸ் அந்த 23 ம் நம்பர் பாட்டில்ல இருக்குற மருந்தை இவர் வாயில மூனு சொட்டு விடுங்க“ என்றார் மீடியா டாக்டர்.

நர்ஸ் அவர் வாயில் மருந்தை விட்ட பிறகு “அய்யோ டாக்டர் இது பெட்ரோல் ஆச்சே” என்று அலறினார் இவர்.

“வெரி குட். இப்ப உங்க taste buds நல்லா வேலை செய்ய ஆரம்பிச்சிடுச்சு உங்களுக்கு எல்லா சுவையையும் உணர முடிகிறது. 500 ரூபாய் ஃபீசை எடுங்கள்”.

உண்மையான டாக்டர் வேற வழி இல்லாமல் 500 ரூபாயைத் தந்து விட்டு வெளியேறினார். ஆனாலும் ஆயிரம் ரூபாயை பெறும் முயற்சியைக் கைவிட வில்லை. சில நாட்கள் கழித்து மீண்டும் அந்த கிளினிக்கிற்கு சென்றார்.

“டாக்டர் எனக்கு மறதி ரொம்ப ஜாஸ்தியாருக்கு குணப்படுத்துங்க“ என்றார்.

“நர்ஸ் அந்த 23 ம் பாட்டிலைத் திறந்து இவர் வாயில மூன்று சொட்டுக்கள் விடுங்க“ என்றார் மீடியா டாக்டர்.

“அய்யோ டாக்டர் அது பெட்ரோல் ஆச்சே” என்று அலறினார் இவர்.

“வெரி குட் உங்க மெமரி பவர் நல்லாய்டுச்சு 500 ரூபா எடுங்க“

இந்த முறையும் ஏமாந்து போன மருத்துவர் சில நாட்கள் கழித்து மீண்டும் வந்தார் .

“எனக்கு கண் பார்வை சரி இல்லை. மருந்து தாங்க டாக்டர்”

“சாரி இதுக்கு என்கிட்ட மருந்து இல்லை இந்தாங்க ஆயிரம் ரூபாய்“ என்றுகூறி ரூபாய் நோட்டை நீட்டினார் மீடியா டாக்டர்

“இது 500 ரூபாய் நோட்டாச்சே “ என்று பதறினார் உண்மையான டாக்டர்.

“வெரிகுட் உங்க பார்வையும் நல்லாய்டுச்சு எடுங்க 500 ரூபாய்”.

பொழைக்க தெரிஞ்சவன் எப்படியும் பொழைச்சுக்குவான்.
படிப்பாவது... கிடிப்பாவது...

**- ஆசிரியர்**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.





தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கத்தின் 4வது மாநில மாநாடு சென்னை, விருகம்பாக்கம், ஹோட்டல் டால்ஃபின் பார்க்கில் 15-09-2019 அன்று காலை 11 மணியளவில் துவங்கி மாலை 3 மணிக்கு நிறைவுபெற்றது. விழாவில் சங்கத்தின் தலைவர் கல்வி டுடே ராமசுப்ரமணியன் தலைமையேற்றார். சங்கத்தின் பொதுச் செயலாளர் மக்கள் விசாரணை ஆ.மவுரியன் அவர்களும் பீப்பிள் டுடே சத்திய நாராயணன் அவர்களும் வரவேற்புரையாற்றினார்கள். விழாவில் சிறப்பு விருந்தினர்களாக தொலைக்காட்சி நெறியாளர் ஜான் தன்ராஜ், IGNOU-வின் பீம்ராவ், முனைவர் D.சிவசங்கரன், V.அருணாச்சலம் ஆகியோர் கலந்துகொண்டனர். மத்திய அரசின் அறிவியல் தணிக்கையாளர் P.ஆறுமுகம் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். விழாவில் 200க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கலந்துகொண்டார்கள். பத்திரிகையாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. போக்குவரத்து தலைக்கவசம் விழிப்புணர்வு பாடல் இசைக்கப்பட்டது. பத்திரிகையாளர்களுக்கு தலைக்கவசம் வழங்கப்பட்டது. விழா நிகழ்ச்சிகளை மக்கள் தொலைக்காட்சியினர் முழுவதுமாக பதிவு செய்தார்கள். அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

**MAKKAL VISARANAI**, Tamil Monthly. Regd. No.: **TN/CC(S)DN/461/19-21**
Registered with Registrar of Newspaper for India Under **No.: TNTAM44870/2012**
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month




Also visit our MAKKAL VISARANAI website http://makkalvisaranai.com/ and enjoy reading more

Scan now to download the eBook (PDF)

Scan now to download the App